எங்கள் கோவை

வார இதழ்



உள்ளே..!

அருள் விருந்து !

பொருமை ! (சிறுகதை)

தேன் துளிகள் !

மாதர் பகுதி !

திரை விருந்து !

தொழிலாளர் உலகம் !

நகர சோதனே !

11–3–70

விலை 25 காசுகள்

கோவை நகரச் செய்திகளைத் தாங்கி வரும் தரமான வார ஏடு.

"எங்கள் கோவை" வெளியீட்டு விழா நிகழ்ச்சி!



திரு. நித்தியானந்தம் அவர்கள் கடவுள் வணக்கம் பாடுதல்.

"எங்கள் கோவை" ஆசிரியர் கோவை முதல்வன் வரவேற்புரை வாசித்தல்.

திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., அவர்கள் எங்கள் கோவை முதல்இதழை வெளியிட்டுச் சிறப்புரை வழங்குகிறார். முதல்இதழைப் பெற்ற தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் இதழைப் படித்துக்கொண்டிருக்கிறார்.



விழாவில் கலந்துகொண்ட பேரறிஞர் திரு. ஜி. டி. நாயுடு, பொதுநல ஊழியர் திரு. ஆர். சண்முகம் பிள்ளை ஆகியோர் முன்வரிசையில் அமர்ந்துள்ளனர். விழாவில் கலந்துகொண்ட தாய்மார்களில் ஒரு பகுதியினர்.

'நெஞ்சத்து நல்லம் யாம்'

எங்கள் கோவை

வார இதழ்

மலர்: 1 11-3-1970 இதழ்: 3

ஆசிரியர்

கோவை முதல்வன்

○

சந்தா விபரம்

ஆண்டு சந்தா : ரூ. 12-00

அரை ஆண்டு சந்தா : ரூ. 6-00

○

விளம்பர விகிதம் இதழுக்கு

முழுப்பக்கம் : ரூ: 100-00

அரைப்பக்கம் : ரூ. 50-00

கால்ப்பக்கம் : ரூ. 25-00

○

சிறு விளம்பரங்களும், வரி விளம்பரங்களும் ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்த விளம்பரங்களுக்கு 20 % தள்ளுபடி உண்டு.

வரிக்கொடுமை...!

உலக நாடுகளில் நிதி அமைச்சராக வருபவர்களுக்கு நல்ல மரியாதைகள் கிடைக்கும்! அந்த வாய்ப்புக் கிடைப்பதைப் பெருமையாகவும் கருதுவார்கள்! ஆனால் நமது நாட்டில் மத்திய அரசிலும் மாநில அரசுகளிலும் நிதியமைச்சர்களாக வருபவர்களுக்கு மரியாதையும் கொடுப்பதில்லை! நிதியமைச்சர்களாக வருபவர்களும் மக்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை கசப்பான மருந்தையே வார்த்துக் கொண்டிருக்கின்றனர்! எல்லா நிதியமைச்சர்களும் காட்டாற்றைக் கடப்பதற்குப் பதிலாகக் கடலைச் சுற்றித்தான் வலம் வருகின்றனர்.

நமது நாட்டில் இன்று மட்டுமல்ல! சென்ற இருபதாண்டுகளாகவே மத்திய மாநில அரசுகள் வரிகளைத்தான் உயர்த்தி வந்துள்ளனவே தவிர, வறுமையை அகற்றத் திட்டம் தீட்டவில்லை.

ஒவ்வொரு ஆண்டு பட்ஜெட்டும் "சோசலிச பட்ஜெட்" என்று சொல்லப்படுகிறது. ஆளும் வர்க்கத்தின் ஆதரவாளர்கள் வழக்கமாக வரவு செலவுத் திட்டத்திற்குப் பஜனை பாடுபவர்களாகத்தான் இருந்து வருகிறார்கள். எதிரணியில் இருப்பவர்கள் கண்டித்துத்தான் குரல் எழுப்புகின்றனர். ஆனால், ஆளும் வர்க்கத்தினர் "செவிடன் காதில் ஊதிய சங்கு" மாதிரி அதிகாரிகள் போட்ட கணக்கை அமைச்சர்கள் படித்தபின் சட்டமாக்கி விடுகின்றனர்.

தமிழக சட்டமன்றத்தில் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்ட விவாதம் நடந்து முடிந்தபின் மாண்பு மிகு அமைச்சர் மதியழகன் அவர்கள் நீண்டதொரு சொற்பொழிவு ஆற்றியுள்ளார். அதில் குறைவின்றி அடுக்கு மொழிகள் இருந்தன! இந்திராவின் அரசுக்குக் கண்டனக் கணைகள் விடுத்துள்ளார்! முதலமைச்சரையும் – சட்டமன்ற உறுப்பினர்களையும் மிக அழகாகப் புகழ்ந்திருக்கிறார்! ஆனால் புதிதாகப் போட்டுள்ள வரிகளுக்கு விளக்கம் மட்டும் தரவில்லை!

நாடு சுதந்திரம் பெற்ற நாளில் இருந்த வரிகள், பல மடங்கு இன்று உயர்ந்து விட்டன! ஆனால மக்கள் வருமானமும், பொருள்களின் விலைகளும் அந்த அளவு உயரவில்லை. என்றாலும், மக்களின் வருமான அடிப்படையில் இன்றைய விலைவாசியே மிக அதிகமாகத் தெரிகிறது. இப்போது போட்டுள்ள வரிகளால் இன்னும் விலைவாசிகள் உயரவே செய்யும்.

இப்படி வரிக்கொடுமையால் மக்களை நசுக்கி ஆட்சி நடத்துவதைவிட நன்முறையில் நாடாளத் தெரிந்த அன்னியர்களிடம் நாட்டை ஒப்படைத்து விடுவதே நல்லது எனக் கருதுகிறேன். ⊙⊙

அருள் விருந்து!

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

நிறை நெஞ்சம்

ஓட்டைப் பாண்டத்துக்குள் வார்க்கும் நீரெல்லாம் ஒழுகிப்போய் விடுகிறது. நீருக்குள்ளே போட்ட ஓட்டைப்பாண்டம் நிறைகுடம் போன்று ஆய்விடுகிறது. நெஞ்சுக்கு அளிக்கும் பொருள்களெல்லாம் நாளடைவில் போதாதவைகளாகி விடுகின்றன. நெஞ்சை இறைவனுக்கு அளித்துவிட்டால் அது நிறைநெஞ்சம் ஆகிறது. போதாது என்னும் குறை நிறை நெஞ்சுக்கில்லை.

வெற்றி வேல்

கடவுளிடத்து இருப்பதெல்லாம் நம்மிடத்தும் உண்டு. கந்தன் உயிர்களுக்குச் சேனைத்தலைவன். வேலாயுதத்தைக் கொண்டு அவன் எக்காரியத்திலும் வெற்றி பெறுகிறான். மனது நம்மிடத்து உள்ள வேல். குவிந்து ஒருமுகப்பட்டு இது கடவுளைச் சார்ந்திருக்குமானால் இது வெற்றி வேல் ஆய்விடுகிறது.

அருள் தாகம்

இன்று இருந்து நாளைக்கு அழிந்து போம் பொருளுக்காக மனிதன் படும்பாடு எவ்வளவு பெரியது! ஊர் ஊராக அலைந்து திரிதல், ஓயாது உழைத்தல் ஆகிய இத்தனைவித இயக்கமும் பொருளல்லாப் பொருளை நாடியுண்டாகிற தாகத்தாலேயாம். என்றைக்கு அது அருள் தாகமாக மாறுகிறதோ அன்றைக்கே புதிய வாழ்வு துவங்குகிறது. தாகம் எல்லார்க்குமுண்டு. தாகமில்லாது முன்னேற்றமில்லை. பொருள் தாகம் மனிதனைப் புண்படுத்துகிறது; அருள்தாகம் ஆறுதலை அளிக்கிறது.

நெல்லிக்கனி

ஐம்புலன்கள் மூலம் நுகரும் இன்பம் முதலில் தித்திக்கிறது. பிறகு துன்பமாய் வடிவெடுத்து விடுகிறது. தகவிலாதவர்க்குத் தெய்வ வழிபாடு துன்பம் போன்று தோன்றுகிறது. அதில் தோய்ந்திருப்பவர்க்கு அது தித்திக்கிறது. கேட்டைக் களையவல்லதும் அதுவேயாம். நலனும் இனிமையும் கடவுளிடத்தே உள.

மனம் மொழி ஒற்றுமை

பூமிக்கும் செடிக்கும் எவ்வளவு பொருத்தமோ அவ்வளவு பொருத்தம் சிந்தைக்கும்சொல்லுக்குமிடையில்இருக்க வேண்டும். மனிதன் எத்தகைய கொள்கையை உடையவன்என்பது முக்கியமானதல்ல. உள்ளமும் உரையும் ஒத்திருக்குமளவு உள்ளம் உறுதிபெறுகிறது. உரையானது உயிர்பெறுகிறது. மனதையும் மொழியையும் ஒன்று படுத்துவதே யோக சாதனத்தின் முதற்படியாகும்.

பொய் சேர்ந்த சிந்தை

சூரியன் அவ்வளவுபெரியது எனினும் ஒரு சிறு மேகம் அதை நமக்குத் தெரியாவண்ணம் மறைத்துவிடுகிறது. மனதில் உள்ள அழுக்கு அதனுள்ளே இருக்கும் தெய்வம் தெரியாதபடி திரைபோட்டு விடுகிறது. பொய்பேசும் தன்மையே அத்தகைய அழுக்காக வடிவெடுத்திருக்கின்றது. சத்ய விரதத்தில் நிலைபெறுமளவு உள்ளே ஒளிரும் இறைவனை உணரலாம்.

சுவைத்தல்

கடவுள் வழிபாட்டுக்கு வெளியுலகிலிருந்துஉண்டாகும் இடைஞ்சல் இடைஞ்சலல்ல. உண்மையான இடைஞ்சல் உள்ளத்தில்உண்டாகிறது. மனதுஇறைவனைச் சுவைக்கத் தெரிந்துகொண்டால்போதும். அப்பொழுது அது எல்லாம் அடையப் பெறுகிறது. ஏனைய பொருள்களுக்கிடையில் இனியவைகளும் இல்லை; இன்னுதவைகளும் இல்லை. சுவைப்பதற்குரிய பொருள் கடவுள் ஒருவரே.

அக்கினி ஜுவாலை

விறகு தீக்கு ஏற்றதாயிருந்தால் போதுமானது. எந்த வனத்திலிருந்து வந்தது. யாரால் பயிர் செய்யப்பட்டது என்பதெல்லாம் பயன்படாத கேள்விகள். ஊர், பேர், உற்ருர், உறவினர் என்ற விசாரங்களெல்லாம் மனிதன் விஷயத்தில் பயன்படாதவைகள். மனிதன் கடவுளுக்கு ஏற்றவன் ஆனுல் போதுமானது. விறகு தீ மயமாவது போன்றுதான் தனது என்பனவற்றை விட்டவன் தெய்வ மயமாகிருன்.

கற்பக விருக்ஷம்

யார் எதைக் கேட்கிருரோ அதை நல்குகிறது கற்பக விருக்ஷம். இயற்கையென்றும், கடவுள் என்றும் பெயர் பெற்றுள்ள கற்பக விருக்ஷத்தின் கீழ்தான் எல்லோரும் இருக்கிருர்கள். யார் எப்பொருளைப் பெறுதற்குத் தகுதியுடையவர் ஆகிருரோ அப்பொருள் அவருக்கு அளிக்கப்படுகிறது. நலத்துக்கே தகுதியுடையவராவது நம் கடமை.

மனக்கண்ணுடி

பச்சைக் கண்ணுடி போட்டுக்கொண்டு பார்ப்பவர்க்கு உலகெல்லாம் பச்சையானது. கண்ணுடியின் நிறத்துக்கு ஏற்பக் காணப்படும்பொருள்களின் நிறம்மாறுகிறது. மனம் என்னும் கண்ணுடி அத்தகையது. கெட்ட மனமுடையார்க்கு உலகம் கேடானது. நல்ல மனமுடையார்க்கு உலகெல்லாம் நல்லது. மனமென்னும் கண்ணுடியை உடைத்தவர்க்கு எல்லாம் கடவுள் மயம்.

இளமை

உடல் பிறக்கிறது, வளர்கிறது, நோய் வாய்ப்படுகிறது, தேய்கிறது, மறைகிறது. ஆனுல் உள்ளம் எந்நாளும் குமரக்கடவுள் போன்றிருக்க முடியும். உள்ளத்தைப் பண்பட்ட நிலையில் வைத்திருப்பதுதான் முருகன் வழிபாடு எனப்படுவது. தளர்வும், சோர்வும், சலிப்பும் விருத்தாப்பியத்தை விளைவிக்கின்றன. உறுதியும், ஊக்கமும், உழைப்பும் இளமையைப் பாதுகாக்கின்றன.

நட்பு

செல்வத்தில் பற்றுவைக்கும் மக்கள் செம்பொருளாகிய தெய்வத்தைப்புறக் கணிக்கின்றனர். பொருள்பற்று தெய்வ நட்பைப் புறக்கணித்துவிடுகிறது. பொருள் பற்று நீங்குமளவு நல்ல உறவாக சித்தமிசை குடியிருக்கும் பரமனது பராமரிப்புப் புலனுகிறது. பிறகு அதற்கு நிகரான துணை வேருென்றுமில்லை என்னும் தெளிவு வருகிறது. அவனது நட்பு ஒன்றே நாடத் தகுந்தது.

துன்பத்திற்குப் பிறப்பிடம்

துன்பப்படாத மனிதன் உலகில் இல்லை. ஒரு காரணம் இல்லாவிட்டால் ஒருகாரணத்தை முன்னிட்டுத் துன்பம் வருகிறது. அக்காரணங்களெல்லாம் அகங்காரம் என்னும் மஹாகாரணத்தில் அடங்கி விடுகின்றன. அகங்காரத்தை அடியோடு அகற்றியவனுக்கு அணுவளவும் துன்பமில்லை.



அன்பர் தபால்....!

தங்கள் பத்திரிகையில் வெளியாகியிருக்கும் கேள்வி–பதில், நகர சோதனை, ஆகிய பகுதிகள் சிறப்பாக அமைந்திருப்பது பற்றி மிக்க மகிழ்ச்சி! இந்தப்பத்திரிகை பெரியோர், சிறியோர், கட்சி சார்பற்றவர்கள் அனைவரும் பல விஷயங்களையும் அறிந்து கொள்ள உதவும் முறையில் அமைந்துள்ளது.

பா. ஜகதீஸ்வரன், சீனிவாசராகவன் வீதி, R. S. *புரம், கோவை-2.*

தங்களின் "கோவை" கண்டேன். பெரு மகிழ்வு கொண்டேன். பொங்கும் தமிழ் உணர்வுகள் ஊற்றெடுத்து ஓட வேண்டும்! அனைவர் இதயங்களிலும் "எங்கள் கோவை" என்றென்றும் தவழ வேண்டும்! இதன் வழிப் புதுமைகள் நிலவ வேண்டும் என வாழ்த்துகிறேன்.

சு. அரங்கசாமி, பட்டேல் ரோடு, பல்லடம்.

4-3-70 இதழில் கார்ட்டூன் நன்றாக உள்ளது. தங்கள் பத்திரிகையில் தொழிலாளர் பகுதி வரும் என இரண்டு இதழ்களையும் புரட்டிப்பார்த்தேன். கிடைக்க வில்லை. மிக்க ஏமாற்றம் அடைந்தேன், இவ்வார இதழிலாவது அந்தப் பகுதி இடம் பெறும் என எதிர் நோக்குகிறேன்.

அருட்பா தங்கவேலு அவர்கள் 'ஆன்மீக சிந்தனை' பகுதியில் அசோகர், புத்தர், காந்தியடிகள், அண்ணாதுரை, ஆகியோர் சிந்தனை நாட்டிற்கு எப்படிப் பயன்பட்டது என்பதை விளக்கமாக எழுதியுள்ளார். அவரை மனதாரப் பாராட்டுகிறேன்.

R. G. *சாமி, ப்ரூக் பாண்ட் கம்பெனி, கோவை-2.*

தங்கள் பத்திரிகையில் சிறுவர் பகுதி என்று ஒரு சிறு பகுதியாவது ஒதுக்கி யிருந்தால் என் போன்ற சிறுவர்களுக்குப் பயன்படும்படியாக இருக்கும். 'கற்பனை உதயம்' என்ற சிறுகதை நன்றாக அமைந்துள்ளது. தங்கள் இதழில் சினிமாச் செய்தி யையும் புகுத்தி, கலை உலக ரசிகர்களையும் ஊக்குவித்து இருக்கிறீர்கள். மிக்க மகிழ்ச்சி!

A. *விஜயன், திருப்பூர்-4.*

4—3—70 இதழில் மாதர் பகுதி, தொழிலாளர் உலகம் முதலிய பகுதிகளை எதிர்பார்த்த எங்களுக்குப் பெரும் ஏமாற்றம் ஏற்பட்டது. சின்னவிஷயம் அல்ல; சிந்திக்க வேண்டிய விஷயம், பகுதியில் நல்ல சிறந்த சிறு சிறு கருத்துக்களை சிறப்பாக அமைத்துள்ளீர்கள். "இதையும் படியுங்கள்" பகுதியில் உள்ளவை படிக்க வேண்டிய விஷயங்களே! அருட்பா தங்கவேலுவின் "ஆன்மீக சிந்தனை" பகுதி பரவாயில்லை. தொடர்கதை ஒன்றை எழுதினால் நன்றாக இருக்கும். கேள்வி-பதில் பகுதியில் நல்ல முறையில் அமரன் அவர்கள் பதில் அளித்துள்ளார். தங்கள் பத்திரிகையில் சினிமாச் செய்திகள் வரும் என்று நாங்கள் எதிர்பார்க்க வில்லை. வந்தது குறித்து மிக்க மகிழ்ச்சி. "எங்கள் கோவை" நல்ல முறையில் வளர்க என வாழ்த்துகிறேன்.

K. *சகுந்தலா, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர்-4.*

மிகப்பெரிய

எருமைப் பண்ணை

பம்பாய்க்கு வடக்கே 20 மைல் தூரத்தில் சுமார் 1300 ஏக்கர் நிலப்பரப்பில் "ஆரே" பால் பண்ணை அமைந்துள்ளது. இது 1949ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஆசியாவில் உள்ள மிகப் பெரிய பால் பண்ணைகளில் இதுவும் ஒன்று. இரண்டு கோடி ரூபாய் மூலதனத்துடனும், பல்வேறு வகையான நவீன சாதனங்களுடனும் செயல்பட்டு வருகிறது. மணி ஒன்றுக்கு 18,000 லிட்டர் பாலை கிருமியும் அசுத்தமும் இல்லாதபடி தூய்மை செய்யும் இயந்திரமும், 40,000 புட்டிகளில் பாலை அடைத்து மூடும் இயந்திரமும் இருக்கின்றன. இப்பண்ணையிலிருந்து நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம் லிட்டர் பால் பம்பாய் நகர மக்களுக்கு வினியோகிக்கப்பட்டு வருகிறது.

ஆரே (Aarey) பால் பண்ணையில் முப்பது பிரிவுகள் இருக்கின்றன. மொத்தம் 215 பேர்கள் பால் கொடுக்கும் எருமைகளை வளர்த்து வருகிறார்கள். 215 பேர்களிடமும் மொத்தமாக 16,000 எருமைகள் இருக்கின்றன. 1949-ல் ஐந்து லிட்டர் பால் கொடுத்த எருமைகள் 1970-ல் ஏழு லிட்டர் பால் கொடுப்பனவாக மாறியுள்ளன. கடந்த பத்து ஆண்டுகளில் பால் உற்பத்தி 40% உயர்ந்துள்ளது.

இப்பண்ணையில் வளர்க்கப்பட்ட 3,000 எருமைக்கன்றுகளை பம்பாய் மாநில விவசாயிகளுக்குக் குறைந்த விலைக்குக் கொடுத்துப் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஏற்பாடுகளை இப்பண்ணையின் நிர்வாகிகள் செய்து வருகிறார்கள். கால்நடைகளுக்கு வருகின்ற வியாதிகளைத் தடுப்பதற்கான ஆராய்ச்சிகளையும் செய்து வருகிறார்கள். இந்தியாவில் எருமைகளின் இன விருத்தியைப் பெருக்கி வருகின்றனர். எதிர்காலத்தில் இப்பண்ணையின் வளர்ச்சி சரித்திரப் புகழ்மிக்கதாக ஆகும் எனக் கருதப்படுகிறது.

O

தகவல்: ப. அ. துரைசாமி.

"எங்கள் கோவை" இனிது வாழ்க!!

சித்தாந்தக் கவிமணி
புலவர் - குமார - ஞானசம்பந்தர், கோபி.

சிங்கமெ னப்பயில் சேரர்சி லம்பொலி
சேர்ந்தொளிர் கொங்கினிலே,
சீர்நடை சங்கம் விஞ்சிடு வேளிர் [1]
சேர்கதை [2] கொங்கினிலே,
துங்க முடைப்புற வெண்பா மாலை [3]
தோன்றிய கொங்கினிலே,
தொல்புகழ் ஔவை அசதிக் கோவை [4]
சொல்லிய கொங்கினிலே
தங்க இலக்கணம் பவணந்தி நன்னூல் [5]
தந்தோர் கொங்கினிலே
தக்கார் புகழும் "கோவை முதல்வன்"
தருவது கற்பகமாம்
"எங்கள் கோவை" எனுந்தமிழ் நல்லிதழ்
என்றும் வாழியவே!
இயலிசை நாடகம் என்பன முத்தமிழ்
ஏந்தியே வாழியவே!!

அடிக்குறிப்பு:

1, 2 - கொங்கு வேளிர் பாடிய கொங்கு வேண்மாக் கதை, விசயமங்கலம், ஈரோடு வட்டம்.

3 - ஐயனர் இதனர் - புறப்பொருள் வெண்பாமாலை, கொங்குச் சேரர் ஆட்சிக்காலத்திருந்தவர்.

4 - ஔவையார் 'அசதி' என்னும் இடையர் தலைவன்மீது இடைப்பாடியிற் பாடியது, அசதிக்கோவை, (சேலம் வட்டம்.)

5 - நன்னூல் பாடிய பவணந்தியார் வாழ்ந்தது, சீனபுரம், (ஈரோடு வட்டம்.)



தொழில் அதிபர்கள் வரிசையில்...!

திரு. ஸ்ரீராம் ஏ. துரைசாமி அவர்கள்.

ஸ்ரீராம் இண்டஸ்ட்ரீஸ்,

துடியலூர்.

[வாழ்க்கைச் சூழ்நிலைகள் எல்லோருக்கும் சிறப்பாக அமைவதில்லை. அப்படி அமைந்தாலும் அதைப் பலர் சரியான முறையில் பயன்படுத்திக்கொள்வதில்லை. ஆனால் நாம் இங்கு குறிப்பிட்டுள்ள அன்பர் திரு. ஏ. துரைசாமி அவர்கள் கிடைத்த வாய்ப்பை முறையாகப் பயன்படுத்தித் தொழிற்துறையில் முன்னேற்றம் கண்டவர். இவரை நான் நேரில் சந்தித்து உரையாடியதில்லை என்றாலும், இவருடைய ஊரைச் சேர்ந்த எனது நண்பர் ப. அ. துரைசாமி அவர்கள் கூறிய கருத்துக்களை வைத்து ஆய்ந்து பார்த்ததில் எனது உள்ளம் பெருமகிழ்வு கொண்டது. இவருடைய தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் எண்ணத்துடன் தொழில் அதிபர்கள் வரிசையில்...! இவரைப்பற்றிக் கிடைத்த தகவல்களை வைத்து இக்கட்டுரையை ஆக்கியுள்ளேன்.]

— ஆசிரியர்.

துடியலூர் ஸ்ரீராம் இண்டஸ்ட்ரீஸ் ஏ. துரைசாமி அவர்கள் எஞ்சினியரிங் தொழிற்துறையில் குறிப்பிடத்தக்க ஒருவர். இவர் கோவை மைக்கேல் உயர்நிலைப் பள்ளியின் மாணவர். இளம் வயதிலேயே தொழிற்துறையில் ஈடுபட்டு அனுபவப்பூர்வமான தொழிலறிவைப் பெற்றுள்ளவர். இவருக்கு இரண்டு சகோதரிகளும் ஒரு தம்பியும் இருக்கின்றனர்.

இவருடைய தம்பி "காந்தி" என்று அன்பாக அழைக்கப்படும் திரு. விஸ்வநாதன், திரு. துரைசாமி அவர்களின் ஆலோசனைப்படி தொழிற்துறைப் பயிற்சிகள் பெற்று வருகிறார். புகைப்படம் எடுப்பதில் ஆர்வமும் அக்கறையும் உள்ள இவர் புகைப்படத் தொழில் பற்றிய நுண்ணறிவும் பெற்று வருகிறார். பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். பண்பான இதயம் படைத்த இளைஞர்!

திரு. துரைசாமி தன்னுடைய கடின உழைப்பின் மூலமும், விடாமுயற்சியின் மூலமும், பிடிவாதத்தாலும்தான் உயர்ந்த நிலையை அடைந்துள்ளார். பள்ளி இறுதி வகுப்புப் படித்துக்கொண்டிருக்கும் போதே கணபதியில் நடந்து கொண்டிருந்த சினிமாக் கொட்டகையின் நிர்வாகப் பொறுப்பினை ஏற்று நடத்துவதற்கான சூழ்நிலை ஏற்பட்டது. வாய்ப்பை

நன்கு பயன்படுத்தித் துணிச்சலுடன் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு சிறப்பாகச் செயலாற்றினர். பகலில் பள்ளியில் படிப்பு; இரவில் சினிமாத் தொழில் இப்படிச் சிலகாலம் இருந்தார்.

தொழிலில் திறமைசாலி என்ற பெயர் ஏற்பட்டது. இவருடைய தகப்பனர் "பம்பு செட்" உற்பத்தி செய்யும் ஸ்ரீராம் இண்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வந்தார். சினிமாத் தொழிலில் கிடைத்த வெற்றியைச் சொல்லியும், இளமைத் துடிப்பைக் காரணம் காட்டியும் தந்தையின் பொறுப்புக்களையும் இவரே ஏற்றுக்கொண்டார். ஏற்றுக்கொண்ட பொறுப்பினை ஏற்றமுறையில் சிறப்பாக செய்யவேண்டும் என்ற ஆர்வ மிகுதியால் இரவு பகல் பாராது கண்ணும் கருத்துமாக நிர்வாகத் துறையில் கவனம் செலுத்தினர். தொழிற்சாலையில் புதிய நவீன இயந்திரங்களைப் புகுத்தி உற்பத்தியை அதிகப்படுத்தினர். லாபம் அதிகம் கிடைத்தது. தொழிலில் திறமைசாலி என்பது உறுதியாயிற்று. சிங்கராம் பாளையத்தைச் சேர்ந்த பெருநிலக்கிழார் திரு. என். எஸ். பழனிசாமிக் கவுண்டரின் மகள் லீலாவதியை திருமணம் செய்து கொண்டார். அதன் பின்பு மின்சார மோட்டார், கதிரடிக்கும் இயந்திரம் முதலியன உற்பத்தி செய்யும் தொழில்களை ஆரம்பித்தார். இப்பொழுது துடியலூரில் சினிமாத் தியேட்டர் ஒன்றையும் கட்டி வருகிருர். இதன் திறப்புவிழா விரைவில் நடைபெற உள்ளது. இவருடைய தொழில் முயற்சி நாளுக்கு நாள் சிறப்படைந்து வருகிறது.

இந்த நவீன உலகத்திற்கு இவரைப் போன்ற இளைஞர்கள் லட்சக்கணக்கில் தேவைப்படுகின்றனர். ஆனல் நமது இந்திய நாட்டில் இளைஞர்கள் துணிந்து தொழிற் துறையில் இறங்கும் வாய்ப்பையும் உற்சாகத்தையும் அரசாங்கம் கொடுக்காத காரணத்தால் சொந்த முயற்சியில் இவரைப்போன்ற சிலரே வரமுடிகிறது. அந்தச் சிலரிலும் மிகச் சிலர்தான் முன்னேற்றமடையமுடிகிறது.

அன்பர் ஏ. துரைசாமி அவர்கள் அயராத உழைப்பும் - நல்ல பண்பும் அவருடைய தொழிலை மட்டும் வளர்க்கவில்லை. இந்த நாட்டிலுள்ள ஆயிரக் கணக்கான ஏழைகளின் வயிற்றுக்கு உணவையளிக்கிறது. இவரைப் போன்று பலர் இந்த நாட்டில் தோன்றுவார்களானல் பஞ்சம் - பசி - பட்டினி என்பதற்கோ, வேலையில்லா திண்டாட்டத்திற்கோ இடமில்லாமல் போய்விடும் என்பது உறுதி.

நண்பர் துரைசாமி அவர்கள் மேலும் பல புதிய தொழில்களைத் தொடங்கி நாட்டின் வளத்தை நல்வளமாக்க இறைவனை இறைஞ்சுகிறேம்.

தகவல் :– ப. அ. துரைசாமி.

இந்திய அழகி !

பெங்களூரைச் சேர்ந்த 17 வயது நிரம்பிய கல்லூரி மாணவி ரூபா சத்யன் இந்திய அழகியாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். இந்தத்தேர்வை பம்பாயைச் சேர்ந்த ஒரு பெண்கள் வாரப் பத்திரிகையும் அழகு சாதனக் கம்பெனியும் சேர்ந்து நடத்தியது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ரூபாவுக்கு கிரீடமும் ரூ. 6000 பணமும் பரிசு கொடுக்கப்பட்டது.

இந்த மாதம் ஜப்பானில் நடைபெறும் உலக அழகிப் போட்டியில் இவர் கலந்து கொள்வார் எனத்தெரிகிறது.

சிரிப்பவர் சிலபேர்

— இளமுருகு —

பத்திரிகை ஆசிரியர் : (ஒரு சினிமா டைரக்டரிடம்) சார்! எனக்கும் ஏதாவது வேஷம் இருந்தாக் கொடுங்க சார்?

சினிமா டைரக்டர் : ஏன்! சார்? நீங்கதானே ''வேஷம்'' பத்திரிகையின் ஆசிரியர்;

பத்திரிகை ஆசிரியர் : ஆமாம்! சார்! நான்தான்! இந்தக்காலத்திலே நடிகர் எல்லாம் பத்திரிகை ஆசிரியர் ஆகும்போது நாங்க எல்லாம் நடிகர் ஆகிவிடவேண்டியது தானே

டைரக்டர்: ... ... ? ... ... ? ... ... !

⊙

நிருபர் : (நடிகையிடம்) உங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத துன்பநிகழ்ச்சி ஏதாவது உண்டா?

நடிகை: ஓ! உண்டே! உங்கள் பத்திரிகைக்கு பேட்டி கொடுப்பதுதான் இப்போது உள்ள பெரிய துன்பநிகழ்ச்சி!

நிருபர் : ... ... ? ... ... ? ... ... !

⊙

எமன்: என்ன துரை! மறைக்காமல் சொல்லும்? நீங்கள் மேடையில் கனல் தெறிக்கும்படி என்னை எதிர்த்து அடுக்குமொழியில் பேசுவது உண்மைதானே!

ஜாக்ஸன் துரை: மன்னிக்கனும்பிரபு! அது தமிழ்நாட்டிலிருந்து வந்த அண்ணாத்துரையுங்க! என்பெயர் ஜாக்ஸன் துரைங்க?

எமன் : ... ... ? ... ... ? ... ... !

⊙

ஒருவர் : இந்தப் பையன் என்ன! குடிச்சுட்டு ஆடிகிட்டே போறான்?

மற்றொருவர் : அவங்க அப்பா குடியும் குடித்தனமுமா இருக்கணும்னு சொன்னாராம்! அதனாலே பையன், அப்பன் சொன்ன சொல்லைத் தட்டாம நடக்கறான்.

ஒருவர் : ? .. .. ? ... ... !

⊙

எமன் : சித்திரகுப்தா! இன்று நமது சபையிலே எதிர்கட்சி அங்கத்தினர்கள் ஏதாவது தீர்மானம் கொண்டு வருகிறார்களா?

சித்திரகுப்தன் : ஆம் குருவே! ''எருமை வாகன எதிர்ப்பு'' தெரிவிச்சிட்டு கார் வாகனம் தீர்மானம் கொண்டு வர வேண்டுமென்று சொல்கிறார்கள்!

எமன் : ? ... ... ? ... ... !

⊙

கிருஷ்ணன் : நண்பரே! நீ நம்மிடம் வேண்டுவதென்ன?

குசேலர் : நீங்க டைரக்ட் பண்ற 'கிருஷ்ண விஜயம்' படத்திலே நமக்கும் ஒரு சான்ஸ்தரணும்

கிருஷ்ணன் : ? ... ... ! ... ... !

⊙

ஒருவர் :- ஏன் சார்? இங்கே தங்க ரூம் கிடைக்குமா?

ஹோட்டல் முதலாளி : ஏய்யா? சாதாரண ரூம் கிடைக்கிறதே கஷ்டம் இதிலே நீ வேறே ''தங்க ரூம்'' கேட்கறியே!

ஒருவர் :- ? ... ... ! ... !

⊙

தந்தை :- ஏம்மா? உன்னுடைய கடைசி முடிவுதான் என்ன?

மகள் :- அப்பா! கல்யாணம் செஞ்சுகிட்டா மாட்டுக்கார வேலன்! இல்லேன்னா! எங்க மாமா!

தந்தை :- ? ... ... ?

⊙

காதலி :- என்ன? அப்படி பார்க்கறீங்க?

காதலன் :- காதலுக்கு கண்ணில்லேன்னாங்க! உனக்கு கண் இருக்குதேன்னு பார்க்கிறேன்,

காதலி :- ? ... ...! ... ...!

⊙

ஹோட்டலில் சாப்பிட வந்தவர் :- சர்வர் ... ...! மல்லிகைப்பூ இட்லி இரண்டு கொண்டா!

சர்வர் :- சார்......! மல்லிகைப்பூஇட்லி இல்லே! மாவு இட்லிதான் இருக்கு?

வந்தவர் :- ? ... ...! ... ...!

⊙

அழுபவர் பலபேர்

தமிழ் நிகழ்ச்சி நிறுத்தப்படும் !

■ அமெரிக்க ரேடியோவில்(வாய்ஸ் ஆப் அமெரிக்கா) வருகிற மே மாதம் 1-ந் தேதி முதல் தமிழ் நிகழ்ச்சிகள் நிறுத்தப்படும்.

அமெரிக்க ரேடியோவில் இப்போது இந்தி, வங்காளி, தமிழ், ஆகிய இந்திய மொழிகளில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகி வருகின்றன. சிக்கன நடவடிக்கையாக மே 1-ந் தேதி முதல் தமிழ் நிகழ்ச்சிகளை நிறுத்திவிடப் போவதாக, அமெரிக்க ரேடியோ அறிவித்துள்ளது. 'வாய்ஸ் ஆப் அமெரிக்கா' தமிழ் நிகழ்ச்சிகள் தினமும் இரவில் ஒலிபரப்பப்பட்டு வருகிறது. தமிழ்ப் பாட்டுக்கள், நாடகம், பேட்டி முதலிய நிகழ்ச்சிகள் இதில் இடம் பெறுகின்றன. தமிழ் நாட்டில் இருந்து அமெரிக்கா செல்லும் பிரமுகர்களைப் பேட்டி கண்டு ஒலிபரப்புவது இதன் தனிச் சிறப்பாக இருந்தது. மறைந்த முதல் அமைச்சர் "அறிஞர் அண்ணு" அவர்கள் அமெரிக்கா சென்றிருந்த போது, அவருடைய பேட்டி இதில் ஒலிபரப்பாகியது. "வாய்ஸ் ஆப் அமெரிக்கா" தமிழ் நிகழ்ச்சிகளை, அமெரிக்காவில் உள்ள தமிழர்கள் மட்டும் அல்லாமல், இந்தியா, இலங்கை, மலேயா, சிங்கப்பூர், பர்மா, இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா முதலிய பல்வேறு நாடுகளிலும் வசிக்கும் தமிழர்கள் கேட்டு வந்தனர்.

மே 1-ந் தேதி முதல் இந்த நிகழ்ச்சி நிறுத்தப்படுவது, உலகின் பல்வேறு நாடுகளில் வசிக்கும் தமிழர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தையும், அதிர்ச்சியையும் அளித்துள்ளன.

ம. பொ. சி. எதிர்ப்பு

■ அமெரிக்க ரேடியோவில் தமிழ் நிகழ்ச்சிகள், நிறுத்தப்படுவதற்கு, தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறுர். இதுபற்றி அவர் கூறும் போது "வாய்ஸ் ஆப் அமெரிக்கா" மூலம் ஒலிபரப்பப்பட்ட கருத்துக்கள் அனைத்துமே நமக்குத் தேவையானவை என்றோ, நல்லவை என்றோ நான் சொல்லவரவில்லை, ஆயினும் அமெரிக்காவுக்கும் தமிழ் நாட்டுக்கும் இடையில் தொடர்பை வளர்க்கவும், இரு நாடுகளில் வாழும் தமிழ் அறிந்தோரிடையே உறவை உறுதிப்படுத்தவும் இது காறும் "வாய்ஸ் ஆப் அமெரிக்கா" பயன்பட்டு வந்தது. அது நிறுத்தப்படுமானல் மகத்தான நஷ்டம் என்றே நான் நினைக்கிறேன். எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை என்று அமெரிக்க அரசு கருதுமானல் அது கிடைப்பதற்கான முயற்சிகளை அந்த அரசு மேற்கொள்ள வேண்டும். அதிலே என்போன்ரோர் ஒத்துழைப்பும் அதற்குக் கிடைக்கும். இதில் செலவு முக்கியம் அல்ல. செல்வந்த நாடான அமெரிக்கா செலவைப் பொருட்படுத்தும் என்று நான் நினைக்கவில்லை. உலக மொழியான தமிழோடு அமெரிக்கா உறவு கொண்டிருப்பதே அதற்கு மிகுந்த பெருமையாகும். உலக மாநாடு நடத்துகின்ற ஒரேமொழி தமிழ் மொழிதான். வங்க மொழி இந்தி மொழிகளிலே "வாய்ஸ் ஆப் அமெரிக்கா" நீடிக்கும்போது உலக மாநாடு நடத்தும் ஒரே மொழியில் மட்டும் "வாய்ஸ் ஆப் அமெரிக்கா" நீடிக்க மறுப்பதை நான் விரும்பவில்லை. இந்திய அரசும் தமிழக அரசும் கூட நட்பு முறையில் முயன்று "வாய்ஸ் ஆப் அமெரிக்கா" நீடிப்பதற்கு வழி செய்யவேண்டும் என்று ம. பொ. சிவஞானம் கூறியுள்ளார். □

நிலஉச்சவரம்பு.

■ நிலவுடைமை உச்சவரம்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கராக இருப்பதை 15 ஸ்டாண்டர்டு ஏக்கராக்குறைக்கத் தமிழ்நாடுசர்க்கார் உத்தேசித்திருப்பதை அசம்பிளியில் சில எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் குறைகூறிப் பேசினர்கள். "உத்தேச நடவடிக்கையானது, உணவுதானிய உற்பத்தியைப் பாதிக்கும். 15 ஏக்கர் வரம்பு, கட்டுப்படியாகக்கூடிய உடைமை இருக்காது. இந்த நில உச்சவரம்பு நடவடிக்கையில் சர்க்கார் அவசர கோலமாக நடந்துகொள்ளக்கூடாது. நிலவுடைமை வரம்பைக் குறைப்பதால், உணவு உற்பத்தி எந்தஅளவுக்குப் பாதிக்கப்படும் என்பதை ஆராய,உயரதிகாரக்கமிஷன்ஒன்றுஅமைக்கப்படவேண்டும்" என்று திரு. கரியமாணிக்கம் அம்பலம் கோரினர். "நிலவுடைமை வரம்பு குறைக்கப்பட்டபின், நிலக்காரர்களிடம் எஞ்சியிருக்கக் கூடிய நிலத்தின் அளவு, டிராக்டர்களைக்கொண்டு விவசாயம் நடத்துவதற்கு உகந்ததாயிராது என்று கருதித்தான், டிராக்டர்கள் மீது விற்பனைவரியை உயர்த்த அரசு உத்தேசித்திருக்கிறது போலும்" என்று அவர் குறிப்பிட்டார். திரு. கே. எஸ். கோதண்டராமய்யா பேசுகையில், நிலவுடைமை உச்சவரம்பைக் குறைத்தால், உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படும் என்றுர். □

நகர சோதனை

இன்சூரன்சு ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்!

கோவையில் உள்ள ஆயுள் இன்சூரன்சு ஊழியர்கள், திருச்சிப்பாதையில் உள்ள அலுவலகத்தின் முன்னல் ஆர்ப்பாட்டம் நடத்தினர்கள். ஆட்டோ மெஷின் திட்டத்தை எதிர்த்தல் மற்றும் பல கோரிக்கைகளுக்காக இந்தப் போராட்டம் நடைபெற்றது.

ரோட்டரி சங்க நிர்வாகிகள்

கோவை ஆர். எஸ். புரம் ரோட்டரி சங்க நிர்வாகிகள் தேர்தல் என். சந்தானம், தலைமையில் நடந்தது. தலைவராக சி. ஆர். நடராசனும் உதவித் தலைவராக சி. வி. ராமராசும், செயலாளராக என். சந்தானமும், பொருளாளராக சாமிநாதனும், தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

திருவள்ளுவர் விழா !

அகில பாரதீய வித்யார்த்தி பரிஷத்தின் கோவைக்கிளை, சென்றமாத இறுதியில் ஆர்.எஸ். புரம், சவிதா ஹாலில் திருவள்ளுவர் விழா கொண்டாடியது.

திரு. தாமோதரன், அவர்களது இறைவணக்கத்தோடு விழா ஆரம்பித்தது. திரு. எஸ். எஸ். சந்திரசேகர் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினர். விழாவிற்குத் தலைமை தாங்கிய திரு. எஸ். சீனிவாசன், (முதல்வர், அரசினர் பொறியியற்கல்லூரி, கோவை) தலைமை உரையாற்றுகையில் பரிஷத் பணியை புகழ்ந்து, அது வளர வேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்தார். டாக்டர் கிரீசன் சிறப்புரை ஆற்றினர். அடுத்து மாவட்டத்தின் பல் வேறு கல்லூரிகளிலிருந்து மாணவ மாணவிகளின் பேச்சுப்போட்டி நடைபெற்றது. வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. திரு. எஸ். சந்தானம் நன்றி நவின்றர். தேசிய கீதத்துடன் விழா இனிது முடிவுற்றது. இத்தகவலை சூரஜ் அவர்கள் தெரிவித்தார்.

அர்ச்சக ஊழியர்கள் கூட்டம் !

கோவை மாவட்ட இந்து தேவாலய பூசாரி அர்ச்சக ஊழியர்கள் சங்க மகாசபைக்கூட்டம் எஸ். ஆறுமுகம், தலைமையில் நடந்தது. விரைவில் மாநில மாநாட்டை சேலத்தில் கூட்டுவது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதிய விவசாய சங்கங்கள் !

கோவை மாவட்ட விவசாயிகள் சங்கத்தின் கிளைகள் 23 கிராமங்களில் தொடங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஊரிலும் நடந்த நிகழ்ச்சிகளில் திரளான விவசாயிகள் கலந்து கொண்டார்கள்.

கோவைக் கல்லூரிகளின் சமூகப்பணி மன்ற நிறைவு விழா !

கோவை அனைத்துக் கல்லூரிகளின் சமூகப் பணி மன்ற நிறைவு விழா, பி. எஸ். ஜி. தொழில் நுட்பக்கல்லூரியில் நடந்தது. விழாவுக்குக் கோவை அரசினர் பெண்கள் பயிற்சி கல்லூரி முதல்வர் ஸ்டெல்லா சவுந்தரராசன் தலைமை தாங்கினர்.

கல்லூரி மாணவி ரூபமஞ்சரி வரவேற்றுப் பேசினர், சங்கச் செயலாளர் வெங்கடரமணன் அறிக்கை வாசித்தார். கோவை மாவட்ட பெரிய நீதிபதி சீனிவாசன் ஆண்டு மலரை வெளியிட்டுப் பேசினர். விழாவையொட்டி கோவை தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்களின் இசைநிகழ்ச்சி நடந்தது. செங்கோடன் நன்றி கூறினர்.

கோவையில் "கிரிக்கெட்" போட்டி!

கோவை காட்டு இலாகா கல்லூரியில் எஸ். எஸ். ராஜன் நினைவு சுழற்கேடயத்திற்கான "கிரிக்கெட்" போட்டி 7-3-70 சனிக்கிழமையன்று தொடங்கியது. இதில் சேலம், கோவை, மாவட்ட "கிரிக்கெட்" ஆட்ட வீரர்கள் கலந்து கொண்டனர். போட்டியை காட்டு இலாகா கல்லூரி முதல்வர் முகம்மது உசேன் தொடங்கி வைத்தார்.

தமிழ்க் கல்லூரி ஆண்டுவிழா

கோவையை அடுத்த பேரூர் தமிழ்க் கல்லூரியில் ஆண்டுவிழா ம. பொ. சிவஞானம் தலைமையில் நடந்தது. விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார், கல்லூரி முதல்வர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ஆகியோர் பேசினர்கள்.

விழாவையொட்டி "நீதியின் நிழல்" "பாரி மகளிர்" ஆகிய நாடகங்கள் நடந்தன. நாடகத்தில் மாணவர்கள் கேசவமூர்த்தி, திருஞானசம்பந்தன், கோபால்சாமி, இராமசாமி ஆகியோர் நடித்தார்கள்.

கல்லூரி மாணவர் கேசவமூர்த்தி "பாம்பு நடனம்" ஆடினர். மற்றும் பல கலை நிகழ்ச்சிகளும் நடந்தன. சாகுல் அமீது நன்றி கூறினர்.

சூலூர் - கோவை நேரடி டெலிபோன் தொடர்பு

மார்ச் முதல் தேதி முதல் கோயமுத்தூரிலிருந்து சூலூருக்கு டிரங் செய்யாமல் நேரடியாக தொலைபேசியில் பேசலாம். இதற்காகத் தபால் தந்தி இலாகா 14 லட்சம் ரூபாய் செலவு செய்துள்ளது.

கோவை-சூலூர் நேரடி டெலிபோன் தொடர்பை மாவட்ட நீதிபதி ஸ்ரீனிவாசன் துவக்கிவைத்தார். திரு. மணி தலைமை வகித்தார். டிவிஷனல் எஞ்சினியர் மெக்காலே டேவிட் வரவேற்றுப் பேசினர். விழாவில் சூலூர் பஞ்சாயத்துத்தலைவர் திரு. குப்புசாமி, சுப்பண்ண கவுண்டர், ஜேசுதாஸ் முதலியோர் கலந்துகொண்டனர்.

கோவையிலிருந்து சூலூருக்குப் போன் செய்பவர்கள் சூலூர் எண்களுடன் 88 முதலில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

குழந்தைகள் பராமரிப்பு

கோவை குழந்தைகள் பராமரிப்புச் சங்கக் கூட்டம் பி.எஸ்.ஜி. தொழில் நுட்பக் கல்லூரி கட்டிடத்தில் நடந்தது. கோவை மாவட்டக் கலெக்டர் திரு. பாங்கோ தலைமை தாங்கினர். சங்கச் செயலாளர் சந்திரகாந்தி கோவிந்தராஜுலு அறிக்கை வாசித்தார். கூட்டத்தில் கனடா நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஹிட்ச் மானேவா அம்மையார் பேசும்போது குழந்தைகள் பராமரிப்புச் சங்கத்துக்காகக் கனடா நாடு ரூ. 105 கோடி செலவிடத் திட்டமிட்டு உள்ளது என்று கூறினர்.

கோவை பி. எஸ். ஜி. ஆர். கிருஷ்ணம்மாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை பங்கஜம் நன்றி கூறினர்.

இன்னிசைக் கச்சேரி!

கோவை ஆர். எஸ். புரம் புரந்தரதாஸ் ஹாலில் 15—3—1970 ஞாயிறு மாலை 6-15 மணிக்கு ஸ்ரீமதிகள் ராஜலக்ஷ்மி வெங்கட்ராமன், திலகம் சம்பத், ஜம்பு கண்ணன், சீதாலக்ஷ்மி வெங்கடேசன் (டைரெக்டர்) சரஸ்வதி ராமச்சந்திரன், விசாலம் கிருஷ்ணசாமி, நீலா ராம்கோபால் ஆகிய 7 பேர்கள் கொண்ட சங்கீத வித்வாம்சினிகளின் இன்னிசைக் கச்சேரி நடைபெறும்.

கள்ள நோட்டு வழக்கு!

2 ரூபாய் கள்ளநோட்டு வழக்கு விசாரணை 7—3—70 சனிக்கிழமையன்று தொடங்கியது. இந்த வழக்கை விசாரிக்க தனி நீதிபதி நியமிக்கப்பட்டு இருக்கிருர்.

கோவை அருகே புகளூரில் கத்தை கத்தையாக 2ரூபாய் கள்ளநோட்டு அச்சடித்ததாக ஆறுமுகக்கவுண்டர் உள்பட 22 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கை விசாரிக்கத் தனி நீதிபதியாக கோவை அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டு ஏ. கே அப்பு நாயர் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருமணம்

கோவை "கரண" ஜவுளிக்கடை உரிமையாளர் வி. எல்லைய செட்டியாரின் மகள் ரதிவதனத்திற்கும் சி. டி. வெங்கடராமன் செட்டியார் மகன் ஸ்ரீபதிக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு ஏராளமான பேர் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்கள். இன்னிசைக் கச்சேரியும் நடந்தது.

மந்திரி சவான் கோவை வருகை!

மத்திய உள்துறை மந்திரி திரு. ஒய். பி. சவான் கோவை வருகிருர். தகவலை கோவை மாவட்ட காங்கிரஸ் (ஆளும் காங்கிரஸ்) கமிட்டித் தலைவர் திரு. எஸ். கே. பரமசிவம் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

திரு. சவான் கோவை மாவட்டத்தில் மார்ச் 21, 22, தேதிகளில் சுற்றுப்பிரயாணம் செய்வார். அவர் தமது சுற்றுப்பிரயாணத்தின் போது கோபி தாலூகாவிலுள்ள மத்திய உதவி மந்திரி திரு. எஸ். ராமசாமியின் ஊரான கூகலூருக்கும் விஜயம் செய்வார்.

ஆட்டோவில் கிடந்த ரூ 13596 "டிராப்ட்"

கோவையில் ஆட்டோ ரிக்ஷா ஒன்றில் ரூ. 13596-24 காசுக்கான ஸ்டேட் பாங்க் டிராப்ட் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. தம் வண்டியில் இந்த டிராப்ட் கிடந்ததைக் கண்டு அதை எடுத்த ஆட்டோ ரிக்ஷா டிரைவர் காணியப்பன் அதை ஆட்டோ ரிக்ஷா சங்கத் தலைவர் பேபியிடம் கொடுத்தார். பேபி அந்த டிராப்டை மேற்குப் பகுதி போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் ரகுபதியிடம் ஒப்படைத்தார். கே. எஸ். வெங்கடாசலம் செட்டி அண்டு சன்ஸ் என்ற பெயருக்கு சேலம் ஸ்டேட் பாங்கு கிளைக்கு எடுக்கப்பட்ட டிராப்ட் அது என்று கூறப்படுகிறது.

கண்நோய் பரிசோதனை முகாம்

கோவை வைத்திய சங்க கட்டிடத்தில் லயன்ஸ் கிளப் ஆதரவில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் கண் அழுத்த நோய் இலவசப் பரிசோதனை 6—3—70 வெள்ளிக்கிழமை மாலை 3 மணி முதல் ஆரம்பமாகியது. பனங்காட்டு ரோட்டில் ரயில்வே லெவல் கிராசிங்குக்கு மேற்குப் புறத்தில் ஸ்ரீநிவாஸ் தியேட்டர் அருகே வைத்திய சங்கக் கட்டிடம் இருக்கிறது. வெள்ளி சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாட்களில் இந்த இலவசப் பரிசோதனை அளிக்கப்பட்டன. நாற்பது வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண்கள், இந்தச் சிகிச்சை பெற்றனர். 6—3—70 வெள்ளிக்கிழமை மாலை 3 மணி முதல் 5 மணி வரையும் 7, 8. தேதிகளில் காலை 9 மணியிலிருந்து 12 மணி வரையிலும், மாலை 2 மணியிலிருந்து 5 மணி வரையிலும் இந்தப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. இந்தியாவில்இம்மாதிரிஇலவசப் பரிசோதனை செய்த பெருமை கோவைக்குத் தான் கிடைத்திருக்கிறது.

கண் அழுத்த நோய் இருந்தவர்கள் இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டனர்.

பி. எஸ். ஜி. ஆர். நினைவு செஷயர் இல்லம்

பி. எஸ். ஜி. ஆர். நாயுடு நினைவு செஷயர் இல்லத்தில் இம் மாதம் முதல் தேதியன்று நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கீழ்க் கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர் : மேஜர் கிருஷ்ண மூர்த்தி,
உப தலைவர் : திரு. ஜி. ஆர். தாமோதரன்,
கௌரவ செயலாளர் : திரு. ஒய். விஸ்வேஸ்வரன்
கௌரவகூட்டுச்செயலாளர்: திரு. ஆர். சுந்தரராஜ்
கௌரவ பொருளாளர்: திரு. எம். கே. குப்புராஜ்
ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நிர்வாகிகள் தேர்வு

கோவை கன்னட நாயக்கர் வாலிபர் சங்க நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது.

என். வேணுகோபால் தலைவராகவும் எஸ். என். வெள்ளியங்கிரி துணைத் தலைவராகவும், ஏ. மருதாசலம் பொதுச் செயலாளராகவும், ஏ. ரங்கநாதன், சி. என். அய்யாசாமி துணைச் செயலாளராகவும், முனியப்பன் பொருளாளராகவும் மற்றும் 7 நிர்வாகக்குழு உறுப்பினர்களும் தேர்ந்து எடுக்கப்பட்டனர்.

கருத்தரங்கு

கோவை தோழமைக் கழகத்தின் 43-வது கருத்தரங்கு நடந்தது. அரங்கசாமி தலைமை வகித்தார். கருத்தரங்கில் கம்பராயர், இராஜகோபால், எழிலண்ணல், குறிஞ்சி, அறிவாழி, இளங்கோ, சுந்தரம், இளமுருகு, மருதாசலம் ஆகியோர் ஐந்தாண்டுத் திட்டங்களில் உள்ள நிறை, குறைகள் பற்றியும் மக்களின் பங்கு பற்றியும் பேசினர்கள். செயலாளர் நன்றி கூறினர்.

50 வயதில் சைக்கிள் பயிலும் சிப்பந்தி

50 வயதை எட்டிப்பிடித்த "சக்தி சுகர்ஸ்" தலைமைக் காரியாலய 'காவலர் ரங்கப்பன்' மாணவனுன தன் மகனுடைய உதவியால் சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொள்கிருர். "எதற்கும் எப்போதும் காலம் கடந்துவிடவில்லை." என்பது ஆங்கிலப் பழமொழி!

அலுவலக சிப்பந்திகள் சொந்தத்தில் "சைக்கிள் வாகனங்களை வாங்கி உபயோகப் படுத்துவதற்கு வசதியளிக்கும் புதிய திட்டத்தின் சுவையான விளைவாகும் இது" ○○

K. சாவித்திரி பி. எஸ். சி.,

கர்ப்பிணிகள் !

கர்ப்பிணிகளாக இருக்கும் பெண்கள் வாந்தி எடுப்பதைப் பற்றி அதிகம் கவலைப்பட வேண்டிய தில்லை. வாந்தி வருவதைத் தடுக்க மருந்துகளைச் சாப்பிடுவதும் தவறு. டாக்டர்களிடம் யோசனை கேட்பது தவறல்ல. ஆனால் நோய் இருந்தால் மட்டுமே மருந்து சாப்பிட வேண்டும்.

அலங்காரம் !

இவ்வளவு நாட்களாகப் பெண்களின் உடை அலங்காரத்தில் அமெரிக்க நாகரிகத்தையும் லண்டன் நாகரிகத்தையும் நமது நாட்டில் சென்னை, பம்பாய், டெல்லி, நகரங்களில்தான் கண்டு வந்தோம். சென்ற ஆறு மாதங்களுக்குள் கோவை நகரிலும் மேலை நாட்டுப் பாணியில் பெண்கள் உடையணிந்து தெருவில் நடமாட ஆரம்பித்து விட்டனர். தென்னிந்தியாவிலேயே அழகுசாதனப் பொருள்கள் அதிகமாகக் கோவையில்தான் விற்பனையாகிறது.

ஹிந்தி நடிகைகளுக்குப் பணம் !

பிரபல ஹிந்தி நடிகைகள் ஒரு படத்தில் நடித்தால் மூன்று லட்சத்திலிருந்து ஐந்து லட்சம் வரை பணம் பெறுகின்றனர்.

தங்கப்பிரேம் !

மூக்குக்கண்ணாடி அணிந்து கொள்ளும் பெண்களில் சிலர் கண்ணாடிகளுக்குத் தங்கப்பிரேம்கள் போட்டுக் கொள்கின்றனர். திடீரென்று கண்ணாடி காணாமல் போனபின் கவலைப்படுகிறார்கள். ஆகவே கழுத்தில்மட்டும் தங்க நகைகளை அணிந்து கொண்டு சாதாரண பிரேம்கள் உடைய கண்ணாடிகளை அணிந்து கொள்வதே நல்லது.

பெண்களின் வருமானம் !

இந்திய நாட்டிலுள்ள கிராமத்துப் பெண்களின் தினசரி வருமானம் சராசரி ஒரு ரூபாய்தான். ஆனால் இந்திய நாணயப்படி ஜப்பான் கிராமப் பெண்கள் 26 ரூபாயும், இங்கிலாந்துக்கிராமப் பெண்கள் 23 ரூபாயும், அமெரிக்கக் கிராமப் பெண்கள் 37 ரூபாயும் சம்பாதிக்கின்றனர்.

ஹிப்ரூக்கள் !

ஹிப்ரூக்கள் என்று ஒருவகை மக்கள் இருக்கிறார்கள். இவர்களுடைய மனைவிமார்கள் உப்புக் குறைந்த அல்லது உப்பு இல்லாத சமையல் செய்து விட்டால் உடனே விவாகரத்துச் செய்து விடுகின்றனர். ஒழுக்கம் குறைந்த பெண்களுக்குத்தான் தாம் செய்யும் சமையலில் உப்புச் சேர்ப்பதில் குறைகள் ஏற்படும் அல்லது போடாமல் விட்டு விடுவார்கள் என்பது இந்த இன மக்களின் திடமான நம்பிக்கையாகும்.

முகத்தில் சுருக்கம் !

வசதிக்குறைவுடைய ஏழைப் பெண்கள்கூட தினமும் குறைந்தது இரண்டு வாழைப்பழங்கள் அல்லது ½ படி பால் சாப்பிட்டு வந்தால் முகத்தில் சுருக்கம் விழுவதைத் தடுத்து விடலாம்.

விவாகரத்து !

ஒருவருக்கு மனைவியாகி விட்ட பின் அவருக்கு அடங்காமலிருப்பது, அவருடைய கருத்துக்கு மாறுபட்டு நடப்பது போன்ற காரியங்களால் தான் இன்று விவாக ரத்துக்கள் அதிகமாக நடைபெறுகின்றன. இன்று இந்தியாவில் விவாக ரத்துக்கள் அதிகமாக நடைபெறும் நகரம் டெல்லி மாநகரம்தான்.

கால்நகைக் கட்டழகிகள் !

பாரிஸ் நகரத்துக் கட்டழகிகள் இந்தியக் கால் நகைகளின் ''ஜல் ஜல்'' என்ற ஒலியை விரும்புவதால் நிறையப் பேர் அணிந்து கொள்கின்றனர். மினி ஸ்கர்ட் அணியும் பெண்களுக்கு நமது நாட்டுச் சலங்கைக்கொலுசுகள் மிக அழகாக இருக்கின்றன.

★ ★

சின்ன விஷயம் அல்ல!

3000 மணி நேர டான்ஸ்!

"ஜான் ஆவக்" என்ற 16 வயது இளைஞர் ஒருமணி நேரத்துக்கு ஒரு முறை 11 நிமிடம் ஓய்வு எடுத்துக் கொண்டு தொடர்ந்து 3000 மணி நேரம் டான்ஸ் ஆடினர். உலகிலேயே மிக அதிக நேரம் ஆடிய டான்ஸ் இதுதான். இந்நிகழ்ச்சி அமெரிக்காவில் 1932-ல் நடைபெற்றுள்ளது. □

அமெரிக்காவுக்கு எச்சரிக்கை!

அமெரிக்காவில் உள்ள கருப்பர்கள் (நீக்ரோக்கள்) பலருக்கு அரசாங்கம் சாப்பாட்டுச் செலவுக்கும் துணிமணிச் செலவுக்கும் இலவசமாகப் பணம் கொடுக்கிறது. இதனல் சோம்பேறிகள் நிறைந்து வருகின்றனர். செல்வம் நிறைந்த நாடு என்பதற்காகக் காசைக் கணக்கின்றிக் கண்டபடி செலவு செய்தால் அமெரிக்காவின் முடிவும் விபரீதமாகிவிடும் என்று அமெரிக்க அரசியல் வாதிகளும், பொருளாதார மேதைகளும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். □

ஜனதிபதி தேர்தல் வழக்கு!

இந்தியத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டதில் கருத்து வேறுபாடு காரணமாக டெல்லிக் கோர்ட்டில் வழக்கு நடந்து கொண்டு வருகிறது. இந்த வழக்கைத் தொடர்ந்தவர்களில் ஒருவரான டெல்லி மேல்சபை உறுப்பினர் திரு. ராமரெட்டி சாட்சியமளித்தார்.

சஞ்சீவரெட்டி பற்றி அவதூறு நோட்டீசுகளைப் பாராளுமன்றக் கட்டிடத்திற்குள் வினியோகிப்பதை நான் நேரில் பார்த்தேன் என்றும் டெல்லி சர்க்கார் துணைமந்திரி யூனூஸ் சலீம், சசிபூஷன், மோகன் தாரியா, எஸ். எம். பானர்ஜி, சந்திரசேகர் மற்றும்பலர் அந்த நோட்டீசுகளை வினியோகித்தனர் என்றும் கூறினர்.

டெல்லி மேல் சபையில் இந்த நோட்டீசுகள் வினியோகித்தது பற்றி ஒழுங்குப்பிரச்னை எழுப்பினேன். அப்போது டெல்லி மந்திரி யூனூஸ் சலீம் சபையை விட்டு வெளியே சென்றுவிட்டார் என்றும் கூறியுள்ளார். விசாரணை முடிவுகள் தெரிய இன்னும் பல நாட்களாகும். □

பிள்ளை பிடிப்பவர்கள்!

வடநாட்டுக்காரர்கள் தென்னிந்தியாவின் முக்கிய நகரங்களுக்கு வந்து அழகான ஆண் பெண் குழந்தைகளைத் தூக்கிச் செல்கின்ற செய்திகளை பலமுறை நாம் படித்திருக்கிறோம். தற்சமயம் மைசூர் மாநிலத்திலும் தமிழ்நாட்டின் கிராமப் பகுதிகளிலும் அம்மாதிரி பிள்ளை பிடிப்பவர்கள் சுற்றி வருவதாக வதந்திகள் அடிபடுகின்றன. □

சபாநாயகர் தாக்கப்பட்டார்!

உத்திர பிரதேச சட்டசபையில் பட்ஜெட் கூட்ட ஆரம்பத்தில் சோசலிஸ்ட் உறுப்பினர் சிவதாஸ் திவாரி என்பவரால் துணை சபாநாயகர் வாசுதேவ் தாக்கப்பட்டார். □

ஊழியர்கள் படி



கடந்த டிசம்பரில் பம்பாயில் நடந்த புதுக் காங்கிரஸ் மகாநாட்டுக்கு ஒரு யூனியன் மந்திரியுடன் சென்ற ஊழியர்களுக்குகான பிரயாணப்படி, தினப்படிச் செலவு ரூ. 13000-க்கு மேலாகியுள்ளது.

இம் மகாநாட்டில் கலந்து கொண்ட பிரதம மந்திரியும், மற்றும் 41 யூனியன் மந்திரிகளும் பிரயாணப்படி, தினப்படி எதுவும் கோரவில்லை என்றும் கூறப்படுகிறது.

பம்பாய்க்குத் தாம் உத்தியோக பூர்வ விஜயம் செய்திருந்ததாகவும், பூனா விஜயம் சம்பந்தமாக தொழில் அபிவிருத்தி மந்திரியுடன் விவாதிக்கக் காங்கிரஸ் மகாநாட்டுக்குச் சுமார் ½ மணி நேரமே சென்றிருந்தாகவும் கூறி யூனியன் உதவி சட்ட மந்திரி திரு. முகம்மது யூனூஸ் ஸலீம் பிரயாணப்படியும் தினப்படியும் கோரியுள்ளார். □

"நடமாடும் கண்காட்சி"!

விவசாயம், கால்நடை அபிவிருத்தி, குடும்பக் கட்டுபாடு திட்ட நடவடிக்கைகளை பிரச்சாரம் செய்ய ஒவ்வொரு மாவட்டத்திலும் நடமாடும் பொருட்காட்சிகளை ஏற்படுத்தத் தமிழ்நாடு சர்க்கார் முடிவு செய்துள்ளது. இந்தப் பொருட்காட்சிக்கு ஏற்பாடு செய்ய, கோவை மாவட்டத்துக்கு ரூ. 4000 அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பொருட்காட்சித் திட்டத்துக்கு தலா ரூ 500 தருமாறு பஞ்சாயத்து யூனியன்கள் கேட்டுள்ளன. □

மந்திரிகளின் செலவு தொகை!

சட்டசபையில் பட்ஜெட் மீது விவாதம் நடந்தபோது அமைச்சர்களின் செலவுகள் பற்றி திரு. டி. மார்டின் பேசுகையில் காங்கிரஸ் ஆட்சியில் அமைச்சர்களுக்கான செலவு ரூ. 5,00,014 ஆயிரமாக இருந்தது. தி. மு. க. ஆட்சியில் ரூ. 10 லட்சத்து 56 ஆயிரமாக உயர்ந்துள்ளது என்றார். கடந்த மூன்று ஆண்டுகளில் அமைச்சர்களுக்குக் கார்வாங்க 7 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இவையல்லாமல் நடப்பு ஆண்டிலும் புதிதாகக் கார்கள் வாங்க மேலும் ரூ. 2 லட்சம் கொடுக்கப்பட்டுள்ளது இதைப் பார்க்கும்போது அரசாங்கம் கார் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறதா என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார். ○

ஆஸ்துமா நோயாளிகள் உப்புக் காற்றைச் சுவாசித்தால் ஆஸ்துமாவின் தொந்தரவைத் தவிர்க்கலாம். ரஷ்யாவில்மேற்கு உக்ரேனில் 680 அடி ஆழத்தில் உள்ள உப்புச் சுரங்கத்தில் ஆஸ்துமா நோயாளிகளுக்கான மருத்துவமனை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இங்கு எந்தவிதமான விசேட மருந்துகளும் கொடுக்காமல் இயற்கையாகவே ஆஸ்துமாவைக்குணமாக்கிவருகிறார்கள். ○

சிந்திக்கவேண்டிய விஷயம்!

கண்தானம்

பிரதமர் திருமதி இந்திரா காந்தி தமதுமறைவுக்குப்பின் தமது கண்களை ஆராய்ச்சி வேலைகளுக்குப் பயன்படுத்திக்கொள்ள அகில இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழகத்திற்கு அனுமதி அளித்திருக்கிறார்.

தாம் இறந்த பின்பு, தமது கண்களை எடுத்துக்கொள்ளவும், உசிதமென்று கருதுகிற வழிகளில் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளவும் கண் பாங்குக்கு அதிகாரம் வழங்கும் கார்டு ஒன்றில் திருமதி இந்திராகாந்தி கையெழுதிட்டார் பிரதமரின் வேண்டுகோள் பேரில் பாங்கு பிரிதிநிதி யொருவர் அவரை அவரது இல்லத்தில் சந்தித்து இந்தக் கையொப்பம் பெற்றார். ○

ஜெயப்பிரகாஷும் வழங்கியுள்ளார்!

சமீபத்தில் கண்தானம் அளிக்க முன்வந்தவர்களில் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணனும் ஒருவர்.

பிரதமர் கண்தானம் அளிக்க முன்வந்திருப்பது மேலும் பலரது கண்களைச் சேகரிக்க பாங்குக்கு உதவும் என்று கண்பாங்கு டைரக்டர் டாக்டர் மதன்மோகன் கூறினார். ○

"டான்ஸ்"!

நடனம் ஆடுவதை நாம் ஆங்கிலத்தில் 'டான்ஸ்' என்கிறோம். ஆனால் 'டான்ஸ்' என்ற சொல் எப்படி வந்தது என்று பலருக்குத் தெரியாது. "டான்டன்" என்ற ஜெர்மன் வார்த்தையிலிருந்து வந்தது "டான்ஸ்". ஜெர்மன் மொழியில் "டான்டன்" என்றால் (உடம்பை) நீட்டி நெளிப்பது என்று பொருள்! ○

இதையும் படியுங்கள்!

ஓம்னி பஸ் வரி இரட்டிப்பாகிறது!

ஓம்னி பஸ்களுக்கான வரியை தமிழக அரசு இரட்டிப்பாக்க உத்திரவு பிறப்பித்துள்ளது. ஓம்னி பஸ்களில் பிரதி ஆசனத்திற்கு பிரதி காலாண்டுக்கு ரூ. 30 வீதம் இருந்த வரி 1—7—69 முதல் பிரதி ஆசனத்திற்கு பிரதி காலாண்டுக்கு ரூ 50 ஆக உயர்த்தப்பட்டு இதுவரை அமுலிலிருந்து வந்தது. இப்போது சர்க்கார் புது உத்திரவு பிறப்பித்திருக்கிறது. முறையான சர்வீஸ் பஸ்களுடன் ஓம்னி பஸ்கள் முறையில்லாமல் போட்டி போடுவதைத் தவிர்க்கும் நோக்குடனும் ஓம்னி பஸ்கள் எந்த நோக்கத்திற்காக அனுமதிக்கப்படுகின்றனவோ அந்த நோக்கமல்லாத வேறு நோக்கங்களுக்குப் பயன்படுவதைத் தடுக்கும் உத்தேசத்துடனும் ஓம்னி பஸ்களுக்கான வரியை பிரதி காலாண்டுக்கு ஆசனத்திற்குரூ. 100 ஆக உயர்த்துவதாக அரசாங்கம் உத்தரவில் கூறியுள்ளது. புது வரி விகிதம் வருகிற ஏப்ரல் முதல்தேதியிலிருந்து அமுலுக்குவரும். ○

நீங்கள் பேரிச்சம் பழம் சாப்பிட்டுவிட்டு அந்தக் கொட்டைகளை சேர்த்து வைத்து, காயவைத்துவறுத்து இடித்துப் பொடி செய்து அதைக் காப்பித்தூளுக்குப்பதிலாக உபயோகப்படுத்துங்கள். பேரிச்சம் பழக் கொட்டைக் காப்பி மலச்சிக்கலை நீக்கிவிடும். உடலும்வலிவுபெறும். ○

தேன்துளிகள்

ப. அ. துரைசாமி.

★ எளிய வாழ்க்கை வாழ்கின்ற மனிதன் யாரையும் ஏமாற்றிப் பிழைக்கவோ அல்லது சுரண்டிச் சாப்பிடவோ தேவையில்லை!

★ சட்டங்களை மதித்து நடக்க மறந்தாலும் அவரவர் மனச்சாட்சியை மதித்து நடக்க வேண்டியது அவசியமாகும்!

★ இருளிலும் ஒளி வீசும் மாணிக்கம் போன்றது உண்மை. பகலிலும் பலர் பார்த்தும் மதியாத கூளாங்கல் போன்றது பொய்!

★ வாய்ப்பேச்சு அதிகமுள்ளவன் வேலையை ஒழுங்காகச் செய்ய மாட்டான். அடக்கம் இல்லாமை ஒழுக்கத்தையே கெடுத்து விடுகிறது!

★ மனசாட்சியின் உருத்தல் தாங்கமுடியாதவர்கள் மது அருந்திச் சிறிது நேரம் உலகை மறந்து இருக்கின்றனர்!

★ உண்மையை அடைய விரும்பினால் நீ முதலில் உண்மை பேசக் கற்றுக்கொள்!

★ சிறையில் இருப்பதுதான் தண்டனை என்று எண்ண வேண்டாம். உண்மையைப் பின்பற்றி எதுவும் செய்ய முடியாமல் பிறருக்கு அடிமையாக இருப்பதும் சிறை தண்டனை தான்!

★ செய்வதைத் திருந்தச்செய். அதுவே சீரும் சிறப்புமாக வாழ்வதற்கான வழி.

★ உழைக்கின்றவனை மதித்தால்தான் அவன் ஊக்கத்தோடு உழைப்பான். உழைக்கின்றவனை மதிக்க முதலில் பழகிக் கொள்ளுங்கள்!

★ ஊக்கமும், உற்சாகமும் அளிக்கப்படாததால் பல இளைஞர்கள் தங்களுடைய ஆற்றல்களைப் பயன்படுத்துவதில்லை. இதனால்தான் நாடு இன்னும் வறுமை நிலையிலேயே இருந்து வருகிறது!

★ பகைவர்களாலும் போற்றி மதிக்கப்படுகின்றவரே உண்மையில் உயர்ந்த மனிதர்!

★ புகழ்கின்றவர்கள், புகழை நேரிடையாக ஏற்றுக் கொள்பவர்கள், இருவருமே சுயநலம் மிகுந்தவர்கள்!

★ அன்பு காட்டுவதிலும், பழிக்குப்பழி வாங்குவதிலும் ஆண்களைக் காட்டிலும் பெண்களே அதிதீவிரமானவர்கள்!

★ அன்பும், திறமையும், நேர்மையும் உள்ள தொழிலாளர்களை தேர்ந்தெடுக்கும் முதலாளியே தொழிலில் அதிகப்படியான லாபத்தை அடைய முடியும்!

★ உலகத்தின் உண்மை நிலையை அறிந்து கொண்டவர்கள் தனிமையை விரும்புகிறார்கள். உண்மையை உணர முடியாதவர்கள் உலக வாழ்க்கையில் ஈடுபட்டு விடுகிறார்கள்!

★ சேரத் தகாதவர்களுடன் சேர்ந்தால் தீராத துன்பம் வந்து சேரும்!

★ விதி ஒன்றுதான் ஏழைகளிடமும், பணக்காரர்களிடமும் ஏற்றத்தாழ்வு பாராமல் நியாயமாக நடந்து கொள்கிறது. ○ ○



தொழிலாளர் உலகம்

தொழிலாளிகளும்-சங்கங்களும்

எஸ். கிருஷ்ணன்

(செயலாளர்: சுதந்திரத் தொழிற்சங்கம்)

தொழில் வளம் மிகுந்த நமது கோவையில் பஞ்சாலைத் தொழில் முக்கியத்துவம் பெற்றிருப்பது அனைவரும் அறிந்த ஒன்று. பஞ்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஜீவாதார உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும், நியாயமான கோரிக்கைகளைப் பெற்றுத்தரவும். உற்பத்திக்குப் பங்கம் ஏற்படாதவாறு முதலாளிகளோடு நல்லுறவை வளர்க்கவும் அரசியல் கலப்பற்ற தொழிற்சங்கம் ஒன்று தேவை! அத்தகைய தொழிற்சங்கம் தொழிலாளர்களின் பிரச்சனைகளை உடனுக்குடன் சுமுகமான முறையில் தீர்த்து வைக்க முன் வரவேண்டும். எந்த ஒருசிறு தகராறு ஏற்பட்டாலும் சம்பந்தப்பட்ட தொழிலாளர் நல அதிகாரிமூலம் சுமுகமான முறையில் பேசித் தீர்வு காணவேண்டும். சமரசம் ஏற்படாவிட்டால் ஆலை நிர்வாகிகளிடம் பேசித் தீர்க்க ஆவன செய்யவேண்டும். தொழிலாளர்களை நியாயத்திற்குப்புறம்பான முறையில் வேலைநிறுத்தமோ - உள்ளிருப்பு வேலைநிறுத்தமோ அல்லது நிர்வாகிகளை 'முற்றுகை' செய்வது போன்ற தீயசெயல்களிலோ ஈடுபட வைத்துத் தொழிலாளர்களின் நலன்களையோ தொழிலின் தரத்தையோ அல்லது நிர்வாகத்தையோ பாதிக்கும் வகையில் செயல்படக் கூடாது. இந்த அடிப்படையில்தான் நான் செயலாளராக இருக்கும் சுதந்திரத் தொழிற்சங்கம் அரசியல்கலப்பின்றிக் கடந்த இரண்டு ஆண்டு காலமாக இயங்கி வருகிறது.

அரசியல் சார்பற்ற சங்கம்

சுதந்திரத் தொழிற்சங்கம் "உழைப்புக்கேற்ற ஊதியம், தொழிலாளர்களின் உரிமைப் பிரச்னை, போனஸ், பிராவிடெண்ட் நிதி, ஓய்வுகால விடுமுறை வசதி, மகப்பேறு ஓய்வுகால நிதி" ஆகிய பிரச்சனைகளில்தலையிட்டு,தொழிலாளர்களுக்காக நியாயமான முறையில் செயல்பட்டு வருகிறது. மேலை நாடுகளைப் போல் தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற நிலை ஏற்பட்டாலொழிய தொழிற் துறையில் அமைதிகாண இயலாது என்பது என் கருத்து. அரசியல்சார்புடைய சங்கங்களின் ஆதிக்கத்தால் தொழிலாளரின் உரிமைகள்பாதிக்கப்பட்டு, தொழிலாளர்களைப் பழிவாங்கும் நிலை உருவாகி வருவதைக்கண் கூடாகக் காண்கிறோம். தொழிலாளர்களுக்காகத்தான் தொழிற் சங்கமே தவிர, தொழிற் சங்கங்களுக்காகத் தொழிலாளர்கள் அல்ல.

ஆகவே, அனைத்துத் தொழிலாளர்களும் அரசியல் கட்சிகளின் ஆதிக்கத்திற்கு உட்படாத சங்கங்களில் தொண்டாற்றுவதும் - அம்மாதிரி சங்கங்களைப் பலப்படுத்துவதும் தலையாய கடமையாகும். தொழில்கள் நலம் பெற வேண்டுமானல் முதலில் தொழிலாளர்களை நிம்மதியாக வாழவிட வேண்டும். ★ ★

பொதுத் தொழிலாளர் மாநாடு

கோவை மாவட்ட பொதுத் தொழிலாளர் முன்னேற்ற சங்க 10-வது ஆண்டு விழாவும், முதல் மாநாடும் நடத்த, வரவேற்புக்குழுக் கூட்டம் பெரியசாமி தலைமையில் நடந்தது.

கூட்டத்தில், பொதுத் தொழிலாளர்களின் மே 1-ந் தேதி சம்பளத்தைத் தேர்தல் நிதிக்குக் கொடுப்பது என்றும், வேறு ஒருநாள் சம்பளத்தை மாநாட்டுக்குக் கொடுப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

★ ★



ஸ்ரீ கோனியம்மன் விழா நாட்களில், தேர்த் திருவிழா வன்று அலங்காரத் தேரில் அம்மன் கோவைத் திருவீதிகளில் உலா வரும் காட்சி.

ஸ்ரீ கோனியம்மன் திருவிழா!

கோவைத் திருநகரின் மத்தியில் திருவிடம் கொண்டிருக்கும் ஸ்ரீ கோனியம்மன் திருவிழா ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது. இவ்வாண்டும் கோவை வாழ் மக்களின் காப்பு தெய்வத்தின் பெரு விழா சென்ற மாதம் 17-ஆம் தேதி முதல் இம்மாதம் 9-ஆம் தேதி வரை வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அரசாங்க அதிகாரிகளும் இன்னிசை வித்வான்களும் — வித்வாம்சினிகளும் விழாவில் கலந்து கொண்டனர். இன்னிசைக் கச்சேரிகள் நடைபெற்றன.

ஜனவரி 19-ம் தேதி தேர் முகூர்த்தக்கால் விழா நடைபெற்றது.

பிப்ரவரி 17-ம் தேதி பூச்சாட்டு விழாவும், 23-ஆம் தேதி கிராமசாந்தியும், 24-ஆம் தேதி அக்கினிச்சாட்டும் நடைபெற்றன. 25-ஆம் தேதி ஸ்ரீ அம்மன் புலிவாகனத்திலும், 26-ஆம் தேதி கிளிவாகனத்திலும், 27-ஆம் தேதி சிம்ம வாகனத்திலும், 28-ஆம் தேதி அன்ன வாகனத் திலும் மார்ச் 1-ஆம் தேதி காமதேனு வாகனத் திலும், 2-ஆம் தேதி வெள்ளையானை வாகனத் திலும் கோவைத் திருவீதிகளில் அழகுபவனிவந்த காட்சி என்றும் நினைவிலிருந்து நீங்கா வண்ண மிருந்தன.

மார்ச் 3-ம் தேதி திருக்கல்யாணம் நடை பெற்றது. இந்நாளில் பூத வாகனத்தில் ஸ்ரீ அம்மன் ஊர்வலம் நடைபெற்றது. மகிஷாசுர வத நாளும் இதுவேயாகும்.

4,ஆம் தேதி கோவை வாழ் மக்களின் குதுகல விழாவான தேர்த்திருவிழா நடைபெற்றது. பக்கத்துக் கிராமங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான ஆண், பெண்கள் தேர்த்திரு விழாவில் கலந்து கொண்ட காட்சி என்னையே மெய்மறக்கச் செய்துவிட்டது.

தேர் ஊர்ந்து வரும் நேரத்தில் லட்சக்கணக் கான மக்கள் வழிநெடுக நின்று அன்புத் தேவதை யைத் தலைகுனிந்து இரு கரம்கூப்பி வழிபட்டனர்.

மித மிஞ்சிய கூட்டத்தை ஆயிரக்கணக் கான பாதுகாவலர்கள் வந்திருந்து ஒழுங்குபடுத் தினர். மாலை 1-மணி முதல் 8—மணி வரை போக்கு வரத்து வாகனங்களை, தேர்வரும் தெருக் களில் விடாமல் வேறு வழிகளில் செல்ல பாது காவல் இலாகாவினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

5-ம் தேதி குதிரை வாகனத்தில் ஸ்ரீ அம்மனின் திருவீதி உலாக்காட்சி நடை பெற்றது. 6-ம் தேதி மாலை தெப்பத்திருவிழா நடைபெற்றது. 7-ஆம் தேதி ஸ்ரீ அம்மனின் யாளிவாகனத் திருவீதி உலாக்காட்சி நடைபெற் றது. 9—ஆம் தேதி வசந்த விழாவுடன் இவ்வாண் டுத் திருவிழா சிறப்பாக நடைபெற்று முடிந்தது.

கோயில் நிர்வாகஅதிகாரி திரு. வி. குப்புராஜ். அவர்கள் விழாவைக் கண்ணும் கருத்துமாக இருந்து கண்காணித்து வந்தார்.

ஸ்ரீ கோனியம்மனை நினைக்கும் நேரமெல்லாம் என் கண்முன்னே திரு. R. சண்முகம் பிள்ளை அவர்களின் உழைப்பும் தோன்றுகின்றது. அந்த அளவு திருவிழா வைபவங்களில் முன் நின்று நற்பணி புரிந்தமையை எவ்வளவு பாராட்டினாலும் தகும். எண்ணற்ற பெரியோர்கள் கோவைப் பெருநகரில் இருக்கிறார்கள் என்றாலும் இவரைப் போல் முன்நின்று கவனிக்க வேறு ஒருவரும் முன் வரவுமில்லை, இவரைப் போல் நற்பணி புரியும் ஆர்வமும் மற்றவர்களிடம் காணமுடியாது!

விழாவிற்கு ஆலோசகர்களாக திரு. C.P. பெரியதம்பி, பி. சண்முகம், சரஸ்வதி நாராயணன், ஆகியோர் இருந்து விழாவைச் சிறப்புடையதாக்கினார்கள்.

திருவிழாக் காலங்களில் தேவஸ்தானத்தில் பணிபுரியும் திரு. குப்புசாமி, அப்பு முதலியவர் களும், மற்றுமுள்ள அன்பர்களும் இரவு பகல் பாராது உழைத்தும்; அர்ச்சகர்கள், பக்தர்களின் விருப்பமறிந்து ஓய்வின்றித் தீபாராதனைகள் அர்ச்சனைகள் விசேஷ பூஜைகள் செய்தும் விழாவைச் சிறப்பித்தனர். விழாக்காலத்தில் எண்ணற்ற பக்தர்கள் ஸ்ரீ கோனியம்மனின் அருள் பெற்று மகிழ்ந்தனர். அம்மன் திருவருளால் பல நலமும் பெறுவோமாக. ○ ○

"சீர்வளரும் கல்வியொடு செல்வநிறை ஆயுள்புகழ்
ஏர்வளரும் மக்கட்பே றெய்துங்காண் - பார்மிசைநல்
வாழ்வுவரும் வன்கோவைக் கோனியம்மன் மாணடிகள்
தாழ்ந்துதொழும் அன்பர்க்கே தான்."

பணம்

பணத்திற்கு இருக்கும் காந்த சக்தியே விசித்திரமானது. அந்தச் சக்தியால் இழுக்கப் படாத பொருள்களே இல்லை. அரசு, புகழ் எதுவுமே அந்தக் காந்த சக்திக்குக் கட்டுப் பட்டு விடுகிறது.

— அறிஞர் அண்ணா.

ஸ்ரீ கோனியம்மன் பதிகம்.

மணி முகிற் குலங்கள் ஒருங்குடன் கூடி
மகிழவிளை யாட்டயர் இடம் போல்
அணியணி யாக மதிநடை பிறழ
அண்டமுப் புறமுற வளைந்து
பணைநெடுங் குன்ற அரண்படு கோவைப்
பதியினைக் காத்தெழுந் தருளும்
குணமணி மணியைக் குலமணி விளக்கைக்
கோனியம் மனைப்பணி வாமே.

மண்டல மதனில் எண்டிசை யிருந்தும்
வள்ளியோர் குணம்பெற வைகும்
தண்பணைப் பதியென் றெண்ணிலா துலர்கள்
சார்ந்தத மூக்கிடும் கோவைத்
தண்டமிழ்ப் பதியில் தொண்டர்கள் போற்றச்
சந்தத மகிழ்வுடன் கோயில்
கொண்டருள் மணியைக் குலமணித் தாயைக்
கோனியம் மனைப்பணி வாமே.

ஆதியாய் அகில உயிர்களும் மற்றும்
அண்டமும் தன்வயிற் றொடுங்க
நீதியாய் அசர சரமுத லெவையும்
நிறையுடன் அளித் தளித் தமைந்த
நாதியாய் விளங்குஞ் சோதியை யமல
நாயகி யைக்குணக் கனியைக்
கோதிலா மணியைக் குலமணி விளக்கைக்
கோனியம் மனைப்பணி வாமே.

காலமுங் கடந்து கருத்தெலாங் கடந்து
காண்டகும் பேரெழில் வளரும்
சீலமும் இளமை விலகிடாப்பொற்பும்
செப்பமும் மருவிய செல்வி
பாலமு தருளும் வாலையை அன்பர்
பந்தனைக் கடங்கிய நிதியைக்
கோலமா மணியைக் குலமணி விளக்கைக்
கோனியம் மனைப்பணி வாமே.

துங்கமா தவர்க்குத் துட்டர்க்கு மொன்றாத்
தோற்றுமோ ரற்புதக் கனியை
எங்குமாய் ஏக பூரண நிலவாய்
இருள்கடிந் தாளும்பே ரொளியைத்
தங்கமா முகத்தின் அன்பினை யன்பர்
தாயகத் தைப்பர சுகத்தைக்
கொங்குவாழ் மணியைக் குலமணி விளக்கைக்
கோனியம் மனைப்பணி வாமே.

சிறுவர் பகுதி

நட்பு...

குழந்தைக் கொருபெயர் குழவி!
கூனி நடப்பவள் கிழவி!
பள்ளியில் படிப்பது கல்வி!
படிப்பால் கிடைப்பது அறிவு!
வீட்டைத் தாங்கிட விட்டம்!
நாட்டைக் காத்திடச் சட்டம்!
தலைவன் செய்வது தியாகம்!
தவசிகள் செய்வது யாகம்!
திருடிப் பிழைப்பவன் திருடன்!
திருமால் வாகனம் கருடன்!
பெண்டிற் கழகு கற்பு
பிரியா திருப்பது நட்பு.

வெண்ணிலா

வட்ட வட்ட வெண்ணிலா!
வானில் நீயும் திரிகிறாய்!
கட்டக் கறுப்பு உன்னுளே!
காணும் செய்தி என்னவோ?
அன்பு மகவு சிரித்திட!
அன்னை அமுது ஊட்டிட
பழுதி லாத காதலர்
பார்த்து மகிழ்ச்சி கொண்டிட!
வெள்ளி யோடம் போலநீ
வெட்ட வெளியில் திரிகிறார்!
மாத மாதம் வருகிறாய்!
மனதைக் கவர்ந்து செல்கிறாய்!
சித்தி ரத்தில் முழுநிலா!
சிவன் சடையில் பிறைநிலா!
மனதை ஈர்க்கும் தண்ணிலா!
மக்கள் போற்றும் வெண்ணிலா!

— குழந்தைக்கவிஞர், பைரவன்.

பொங்கி எழு

இராசை – இளஞ்சேரல்
அரசினர் பொறியற் கல்லூரி, கோவை-13.

விண்ணில் மின்னிடும் வெண்ணிலவாய்
மண்ணில் மாண்புறும் திருநாடே!
எண்ணில் எழுத்தில் சிகரமென
பண்பில் அன்பில் உயர்நாடே!
வள்ளுவன் வாழ்ந்த திருநாடே!
வளமுடன் வாழும் தமிழ்நாடே!
மணித்தமிழ் காக்க மறவாதே!
தனியர சாக்கத் தவறாதே!
அயலார் பிடியில் இனியிருந்தால்
அடைவாய் பலப்பல துன்பங்கள்!
ஓய்வினி உமக்கு இனியில்லை!
உயர்ந்திடு! எழுந்திடு!! உறங்காதே!!!
பொறுத்தது போதும் பொங்கிஎழு!
பொன்னிவள நாடே! பொங்கிஎழு!!

சென்ற வாரம்
விடை தெரியுமா? பகுதி-விடை!

வாசகர்கள் பலர் பலவிதக் காரணங்களைக் கூறியிருந்தனர். கற்பனையில் சில விசித்திரமான காரணங்களை எழுதி அனுப்பியிருந்தனர். ஆனால் ஒன்றுகூடச் சரியானதாக இல்லை.

சரியான விடை சொல்லாத வாசகர்களுக்கு ஒரு ரூபாய் பரிசு கொடுக்க இயலவில்லை. ஆனால் வாசகர்களுக்கு விடையைக் கூறிவிட்டு வேறு ஒரு பரிசும் கொடுக்க விரும்புகிறேன். விடையைக் கீழே தந்துள்ளேன். பரிசை 26 ம் பக்கம் பெற்றுக்கொள்ளுங்கள்.

விடை:

ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் யார் ஆட்டத்தை ஆரம்பிப்பது என்பதற்காக 'நடுவர்' பூவா? தலையா? என நாணயத்தைச் சுண்டினார். அதை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்த ஒரு குழுத் தலைவரின் வாயில் காசு விழுந்து வயிற்றுக் குள்ளும் சென்றுவிட்டது. ஆகவேதான் ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பே டாக்டர் அழைத்துவரப்பட்டார்!

கேள்வி...? பதில்...!

பதில்தருபவர்: *அமரன்*

— கார்த்திகேயன், திருச்சிரோடு, கோவை.

கேள்வி: திரு. சி. சுப்பிரமணியம் எங்கே இருக்கிறார்?

பதில்: பிரதமர் இந்திராவின் மாளிகையின் பூஜை அறையில் இருக்கிறார்.

— S. இரத்தினசாமி, குறிச்சி, கோவை.

கேள்வி: **1972 லும் தமிழகத்தில் தி. மு. க. ஆட்சியே ஏற்படும் என்பது என் கருத்து. தங்கள் கருத்தென்ன?**

பதில்: உங்கள் கருத்தே என் கருத்தும்!

— ப. நிர்மலா, செட்டிவீதி, கோவை.

கேள்வி: ''எங்கள் கோவை''யில் தொடர்கதை போடமாட்டீர்களா?

பதில்: உங்களைப் போன்ற வாசகர்களின் விருப்பங்களைப் பொறுத்துத்தானே 'எங்கள் கோவை' யை வெளியிடுகிறோம். விரைவில் ஒரு தொடர்கதை ஆரம்பிக்க முயற்சிக்கிறேன்.

— முத்துராமன், தடாகம் ரோடு, கோவை.

கேள்வி: ''எங்கள் கோவை'' எத்தனை பிரதிகள் அச்சாகின்றன?

பதில்: பெண்கள் உண்மையான வயதைச் சொல்லாதது போல, பத்திரிகை ஆசிரியர்கள்தாம் அச்சிடும் பிரதிகளைச் சரியாகச் சொல்லமாட்டார்கள். சொன்னாலும் மற்றவர்கள் நம்புவதில்லை!

— வி. திருஞானம், பாரதியார் ரோடு,
பா. நா. பாளையம், கோவை.

கேள்வி: நீங்கள் சுதந்திரக் கட்சிக்காரர் தானே?

பதில்: நான் சுதந்திரக் கட்சியில் அங்கத்தினராக இருப்பது போலவே எல்லாக் கட்சியிலும் அங்கத்தினராக இருப்பது உங்களுக்குத் தெரியாது போலும்!

— ஷண்முகவேல், என்.எச். ரோடு, கோவை.

கேள்வி: அறிஞர் அண்ணாவுக்கும் – கலைஞர் கருணாநிதிக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் என்னென்ன?

பதில்: ஒற்றுமைகள் நிறைய உண்டு! அன்று

அண்ணா கழகத்தைக் காத்ததுபோல்-இன்றும் கலைஞர் கழகத்தைக் காத்து வளர்க்கிறார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு பற்றி அண்ணா கூறினார். கலைஞரும் மேடைதோறும் அவைபற்றி முழங்குகிறார். ஆனால் அண்ணா என்றும் 'அண்ணா' தான்! கலைஞர் என்றுமே தம்பிதான்! கலைஞரும் அதைத்தான் விரும்புகிறார்!

— வேலுசாமி, ராஜவீதி, கணபதி.

கேள்வி: கணபதியில் புதிதாக ஏற்படுத்தப்படும் ஹரிஜன சேரி பற்றி உங்களுக்குத் தெரியுமா?

பதில்: செய்தி தெரியும்! ஆனால் நான் அரசியல் வாதிகளுடன் சண்டை போடத் தயாராக இல்லை! இந்தக் கேள்விக்கு என்னிடம் விடை கேட்பதைவிட உங்களூர்ப் பிரமுகர் அவினாசித் தொகுதி எம். எல். ஏ. வைக் கேளுங்கள். விபரமாகச் சொல்வார்.

— இராமநாதன், நேருவீதி,
ராம்நகர், கோவை,

கேள்வி: கேள்வி, பதில் பகுதியை இரண்டு பக்கங்கள் ஆக்கினால் என்ன?

பதில்: கேள்விகளை நிறைய அனுப்புங்கள். நண்பர்களையும் எழுதச் சொல்லுங்கள்; இரண்டு பக்கமென்ன மூன்று, நான்கு பக்கங்கள் வேண்டுமானாலும் ஒதுக்குகிறோம்.

— எஸ். விஸ்வநாதன், அரசூர், சூலூர்வழி.

கேள்வி: நடிகர் கே. ஏ. தங்கவேலுவின் முகவரியைத் தெரிவிப்பீர்களா?

பதில்: கே. ஏ. தங்கவேலு,
17, ராஜாபாதர் முதலி தெரு,
தி. நகர், சென்னை-17.



பல அறிஞர்கள் கூறிவிட்டனர். ஆனல் அம்மாதிரி உலக இயக்கம் இருந்ததில்லை!

ஒருவன் ஒரு காரியத்தைச் செய்ய முற்பட்டால் பொருமையின் காரணமாகத் தடைக் கற்களைச் சிலர் நட்ட முற்படுகின்றனர். ஆனல் அவர்களெல்லாம் மேலே தெய்வம் என்று ஒன்று இருப்பதை மறந்து விடுகின்றனர். இப்படித் தன் தாத்தா அடிக்கடி யாருடனுவது பேசிக்கொண்டிருக்கும் கருத்தை, சந்திரன் தன் வகுப்புத் தோழனுன ரவியிடம் கூறிக் கொண்டு தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தான்.

ரவி...என் தாய், தந்தையர், தாத்தா யாருமே ஏழையாகப் பிறந்து ஏழையாக வாழ்ந்தவர்கள் அல்ல! நல்ல பணக்காரக் குடும்பத்திலே பிறந்து ஏழைகளாகமாற்றப்பட்டவர்கள்! நாம்இருவரும் பள்ளியில் எப்படி இணைபிரியாத நண்பர்களாக இருக்கிருேமோ அதே போல் என் அப்பாவுக்கும் மிக நெருக்கமான நண்பர் ஒருவர் இருந்தார். அவரும் என் அப்பாவும் அடிக்கடி வெளியூர் சென்று வியாபாரம் செய்து, வருகிற லாபத்தைப் பங்கிட்டுவைத்துக் கொள்வார்கள்.

இவர்களுடைய கூட்டு வியாபாரம் பல வருடங்களாக இருந்திருக்கின்றன. எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து என் அப்பா, சண்முகம்...! என்றதும், அப்பாவின் நண்பர் இதோ வந்துவிட்டேன் சங்கர்...! என்று கூறிவிட்டு யாருடன் பேசிக் கொண்டிருந்தாலும் வந்து விடுவார். அவ்வளவு இணைபிரியாநண்பர்

ஏழையாகப் பிறக்கும் போதே ஏக்கமும் அவனுடன் பிறந்து விடுகிறது! நல்ல எண்ணங்களுடன் பணக்காரனுகப் பிறந்தவனும் நாளாவட்டத்தில் சூழ் நிலையால் பண்பு கெட்டவனுக மாறிவிடுகிருன்!

அன்பு நண்பர்களாக இருப்பவர்கள் சில சமயத்தில் மன மாச்சரியங்களுக்கு இடம் கொடுத்து பயங்கர எதிராளிகளாக மாறிவிடுகின்றனர்! ஒரே வயிற்றில் பிறந்த அண்ணன் தம்பிகள்கூட சில சமயங்களில் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற முறையில் காரியத்தை முடித்து விடுகின்றனர்!

இந்த உலகம் தோன்றிய நாள் முதல் இன்றுவரை மனித இயக்கமே போட்டிப் பொருமைகளில் இறங்கித்தான் செயல் பட்டு வருகின்றன.

"போட்டி எல்லா இடத்திலும் தேவை! பொருமை எங்குமே தேவையில்லை" என்று

களாக இருந்தவர்கள் வியாபாரத்தில் கொஞ்சம் நஷ்டம் என்றவுடன் மனம் மாறிவிட்டார்கள். இருவருமே தனித் தனியாகப் பிரிந்து வியாபாரம் செய்ய ஆரம்பித்தனர். முறையான வியாபாரத்தாலும் திறமையாலும் என் அப்பா நல்ல லாபம் சம்பாதிக்க ஆரம்பித்தார். ஆனுல் சண்முகம் என்பவருக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டுவிட்டது.

தோல்விமுகம் கண்டுவிட்ட அவருக்கு வியாபாரம் பிடிக்காமல் சூதாட்டத்திலும் - மது அருந்துவதிலும் கவனம் திரும்பி வாழ்க்கையைப் பாழ்படுத்திக் கொண்டார். மோசமான நடத்தை உள்ளவர்களுடன் சேர்ந்து திருட்டுத் தொழிலிலும் ஈடுபட்டார்.

பாதையிலே செல்பவர்களை வழிமறித்துக் கொள்ளையடிக்க ஆரம்பித்தார். வாழ்க்கை மிகவும் கேவலமான முறையில் மாற்றமடைந்து விட்டது. ஊரார் அனைவரும் சண்முகத்தைக் கண்டபடி பேச ஆரம்பித்தனர். இதன் காரணமாக என் அப்பா மீது பொருமை கொள்ள ஆரம்பித்தார். எப்படியாவது என் அப்பாவின் வியாபாரத்தைப் பாழ்படுத்த வேண்டும் என்று முடிவு செய்து, வீண் தொல்லைகளைக் கொடுத்து வந்தார்.

ஒரு சமயம் சிலரைக் கூட்டிச் சென்று வியாபாரம் செய்யச் சென்ற இடத்திலேயே என் அப்பாவின் கையிலிருந்த பணத்தையும் பெட்டிச்சாவியையும் பிடுங்கிக்கொண்டு படுகொலை செய்து விட்டார்.

பெட்டிச்சாவியுடன் எங்கள் வீட்டிற்கு வந்து என் அம்மாவிடம் தகராறு செய்து பெட்டியிலிருந்த பணத்தையும் எடுத்துக் கொண்டு என் அம்மாவையும் கொலை செய்ததை நான் பார்த்ததும் ஓடிச் சென்று என் தாத்தாவிடம் கூறினேன்.

ஆனுல் தாத்தா வருவதற்குள் சண்முகம் மறைந்து விட்டார். இதுவரை போலீஸ்காரர்கள் கைக்கும் அவர் கிடைக்கவில்லை. அவர் எங்கே இருக்கிறுர் என்ற விபரமும் தெரியவில்லை. அதன் பிறகுதான் என் தாத்தாவின் பாதுகாப்பில் எவ்வித வசதியுமின்றி நான் வாழ்கிறேன். ஆனுல் வசதியற்ற எனக்கு நீ செய்த உதவிகளை நான் என்றுமே மறக்க முடியாதல்லவா ரவி...!

ஆகவேதான் 'பொருமை' பற்றி என் தாத்தா ஏதோ பேசிக் கொண்டிருந்த போது, உனது நட்பைப் பற்றியும் உன்னைப் பற்றியும் குறிப்பிட்டேன். நான் சொன்னதையெல்லாம் சிரித்துக் கொண்டே கேட்ட என் தாத்தா திடீரென்று...,

"அவனுடனு...நீ சேர்ந்து கொண்டிருக்கிருய்? அவனுடைய அப்பாதானடா உன் அப்பாவைக் கொலை செய்தது. நீ அவனுடன் சேரலாமா?" என்று கடிந்தார்! எனக்குத் திக்கென்ருகிவிட்டது – என்ருன் சந்திரன்.

இதைக் கேட்டதும் ரவியின் முகமும் சற்றுச் சிறுத்துவிட்டது.

"சந்திரன் பேசுவதற்கு முன்பாக ரவியே பேச்சை ஆரம்பித்துவிட்டான்.

சந்திரன் நீ சொல்வது உண்மையாக இருக்கலாம்! என் அப்பா இப்போது ஊரில் இல்லை என்று வெளியில் சொல்லி விட்டு எங்கள் வீட்டிலேயே மாறுவேடத்தில் இருக்கிருர்" என்ருன்.

சந்திரன் எதுவுமே பேசாமல் நின்று கொண்டிருந்தான்.

"சந்திரன்! நீ கவலைப்படாதே? உன் தாத்தாவிடம் நானே விபரத்தைக் கூறி நிலைமையைச் சரிசெய்து விடுகிறேன் என்று கூறிவிட்டு ரவி ஒரே ஓட்டமாகத் தன் வீட்டிற்குச் சென்றான். அரைமணி நேரத்தில் ரவி தங்க நகைகளையும் பெட்டிச் சாவியையும் யாருக்கும் தெரியாமல் எடுத்து வந்து சந்திரனிடம் கொடுத்தபின்பு போலீசிலும் தன் அப்பாவைப்பற்றிப் புகார் கொடுத்துவிட்டான்.

சில நாட்களில் ரவியின் தந்தையும், தாயும் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். ஆனால் சந்திரனும் ரவியும் இணைபிரியா நண்பர்களாகிவிட்டனர்! ரவியின் நேர்மையான குணத்தைக் கண்டு சந்திரனின் தாத்தா பெருமகிழ்ச்சி அடைந்தார்!

— எம்- ஆர், சாமி, பி. ஏ.

○ ○

சந்தாதாரர்களுக்குப் புத்தகம் பரிசு!

"எங்கள் கோவை" வார இதழுக்கு 1971 மார்ச் 31 வரை பதிவாகும் முழு ஆண்டு சந்தாதாரர்களுக்கு "அண்ணல் காந்தியடிகளின் நூற்றாண்டு விழா சிறப்பு மலர் - பேரறிஞர் அண்ணா நினைவு மலர்" புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.

ஆண்டுச் சந்தா ரூ. 12--00 மட்டுமே!
இன்றே சந்தாதாரராகுங்கள்.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி :
ஆசிரியர்
"எங்கள் கோவை"
823, பெரியகடை வீதி, கோவை-1.

சரியான விடை தராத வாசகர்களுக்கு வழங்கிய பரிசு!



முகப்புப்படம்.

திரு. மார்ட்டின் லூதர்கிங்

காந்தியடிகள் கூறிய அமைதிப்புரட்சியை விரும்பியவர்! அபிரகாம்லிங்கன் கூறியபடி அடிமைத் தனத்தை அகற்றப் பாடுபட்டவர்! அமெரிக்கக் காந்தி என்ற புகழைப் பெற்றவர்!! அமெரிக்கமக்களின் அமைதித் தலைவர்! இவர் நினைவாகக் கோவையில் "மார்ட்டின் லூதர் கிங் நினைவு மன்றம்" ஆரம்பிக்கப்பட்டுள்ளது! மன்றத்தின்மூலம் அமெரிக்க – இந்திய கலாச்சாரங்களைத் தெரிந்து கொள்ளும் வகையில் பொது நூல்நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படும். இம்மன்றத்தின்மூலம் அமெரிக்க ரேடியோவில் "தமிழ் ஒலிபரப்பு" தொடர்ந்து இருக்க வேண்டும் என்று அமெரிக்க அரசுக்குத் தபால் எழுதப்பட்டுள்ளது.



விமர்சனம் :

கோவை ராயல் தியேட்டரில் ஓடிக்கொண்டிருக்கும் விளையாட்டுப்பிள்ளை திரு. ஏ. பி. நாகராஜன் அவர்கள் இயக்குனராக இருந்து தயாரிக்கப் பட்ட படம். இவருடைய வழக்கமான தயாரிப்புகளிலிருந்து பலப்பல வேறுபாடுகளைக் கொண்ட படம். ரேக்ளா பந்தயத்தில் சிவாஜியும் பத்மினியும் மோதும் காட்சியிலிருந்து அவர்கள் காதல் ஆரம்பமாகிறது. போட்டி விறுவிறுப்பான முறையில் படமாக்கப் பட்டிருக்கிறது. காதலர்கள் எழுத்தாலேயே பேசிக் கொள்வது நல்ல புதுமை.

ராகவனின் நடிப்பில் குறை சொல்ல முடியாது. கணவனுக்குத் தெரியாமல் ருக்மணி மகளுக்கு வளைகாப்பு நடத்துவதும், மகளையும் பேரனையும் சென்று பார்த்து வருவதும், பின்பு தன் வீட்டிலேயே பேரன் திருடியதைக் கண்டு தாத்தா அவனை அடித்துவிட்டு, அணைத்துக் கொள்வதும் உருக்கமான காட்சிகள். இடையிடையே நகைச்சுவை கலந்து படம் சிறப்பாக எடுக்கப்பட்டுள்ளது.

சிவாஜியின் நடிப்புக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. விடுதலைப் பத்திரத்தில் கையெழுத்திடுவதும், மனைவியின் எதிரில் நடந்து காட்டுவதும் இளைய ராணியின் அரசவையில் ஆங்கிலத்தில் பேசுவதும் மிகச் சிறப்பாக இருக்கிறது. சிவக்குமார் கொடுத்த பாகத்தை நிறைவோடு செய்திருக்கிறார். பாலையா ஒரு கண்ணை இழுத்து நடிக்கும் நடிப்பு, ரசிகர்களுக்கு நல்ல விருந்து! ருக்மணியும் ராகவனும் திருப்தியாக நடித்திருக்கிறார்கள். காஞ்சனா இடை வேளைக்குப்பின் ராணியாகிவிட்டார். சோவும் மனோரமாவும் நகைச்சுவை நடிகர்களாக வருகின்றனர். எமன் வேஷம் பழையதானாலும் நல்ல சிரிப்பாக இருக்கிறது. கதையின் கருத்து சிறப்பாகத் தோன்றாவிட்டாலும் பார்ப்பதற்குச் சலிப்பில்லாமல் இருக்கிறது. சோவை இடைவேளைக்குப் பிறகு திடீர் வில்லனாக்கி இருப்பது ஒரு புதுமையாகும். பாட்டுக்கள் சுமாராக இருக்கின்றன. **மொத்தத்தில் விளையாட்டுப்பிள்ளை கெட்டிக்காரப் பிள்ளை.** ★

குளு குளு ஊட்டியில் "என் அண்ணன்"

வீனஸ் பிக்சர்சாரின் ஈஸ்ட்மன் கலர் தயாரிப்பான "என் அண்ணன்" படத்திற்காக எம். ஜி. ஆர்., ஜெயலலிதா பங்கு கொண்ட ஒரு பாடல் காட்சி ஊட்டியில் படமாக்கப்பட்டது. இப்படத்தில் எம். ஜி. ஆர். கிராமப்புற இளைஞனாகவும், ஜெயலலிதா அழகுமிக்க கிராமப் பெண்ணாகவும் தோன்றி நடித்தனர். அப்பாட்டு கவிஞர் வாலி எழுத, கே. வி. மகாதேவன் இசையமைத்து, டி. எம். சவுந்தரராஜன் பாடியுள்ளார். பாட்டில் வரும் முதல் அடிகள் வருமாறு :

"கொண்டை ஒருபக்கம் சரியச்சரிய
கொட்டடிச் சேலை தழுவத் தழுவ
தண்டை ஒருபக்கம் குலுங்கக் குலுங்க
சலக்கு சலக்கு சிங்காரி — உன்
சரக்கு என்னடி கைகாரி !!

"பூலரங்குடு" என்னும் தெலுங்குப் படத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தப் படத்தில் அலேக் நிர்மலா, முத்துராமன், நம்பியார், சோ, டி. கே. பகவதி மற்றும் பலர் நடிக்கின்றனர். சொர்ணம் வசனம் எழுத, வி. ராமமூர்த்தி காமிராவை இயக்க, ப. நீலகண்டன் டைரக்ட் செய்கிறார். இப்படம் மிக வேகமாக வளர்ந்து வருகிறது.

குமரிக் கோட்டம்

எம். ஜி. ஆர். நடிக்கும் கே. சி. பிலிம்சின் வண்ணப் படம் "குமரிக் கோட்டம்" கோவை செழியன் தயாரிக்கும் படமான இந்தப் படம் வருகிற மே மாதம் திரைக்குவரும் என்று தெரிகிறது.

ஜெயலலிதா கதாநாயகியாக நடிக்கும் இந்தப் படத்தில் லட்சுமி, அசோகன், மனோகர், வி. கே. ராமசாமி, சோ, சச்சு ஆகியோரும் நடிக்கின்றனர்.

எம். எஸ். விஸ்வநாதன் இசை அமைக்க, சொர்ணம் வசனம் எழுதுகிறார். ப. நீலகண்டன் டைரக்ட் செய்கிறார்.

தமிழில் "ஆசீர்வாத்"

ஏ. எல். எஸ். புரொடக்ஷன் சார் இந்தி வெற்றிப்படமான 'ஆசீர்வாத்'தை தமிழில் தயாரிக்கிறார்கள்.

இதில் சிவாஜி கணேசன் நடிக்கிறார். மதுரை திருமாறன் திரைக் கதை வசனம் எழுத கே. வி. மகாதேவன் இசைஅமைக்கிறார். பீம்சிங் டைரக்டு செய்கிறார்.

நீதிதேவன்

டைரக்டர் ஆர். தேவராஜனின் கண்ணன் மூவீசார் ஒருபடத்தை உருவாக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

இந்தப் படத்துக்கு "நீதிதேவன்" என்று பெயர் சூட்டப்பட்டு உள்ளது. நட்சத்திரத் தேர்வு நடக்கிறது. பாலமுருகன் கதை வசனம் எழுத ஆர். தேவராசன் டைரக்டு செய்கிறார்.

சூதாட்டம்

சித்ரா புரொடக்சன்சார் 'சூதாட்டம்' என்ற பெயரில் ஒரு கலர் படத்தை உருவாக்கி வருகிறார்கள். கே. எஸ். ஜி. டைரக்ட் செய்கிறார். ○ ○

சென்னையில் எல், விஜயலட்சுமி !

சினிமாவிற்கு நடனம் ஆடினார் !!

நடிகை எல். விஜயலட்சுமி திருமணம் ஆகி கணவருடன் பிலிப்பைன்ஸ் நாட்டில் இருந்தார் அல்லவா ? இவர் ஒருமாதம் சென்னையில் தங்கி இருப்பதற்காக பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து வந்திருந்தார். இங்கு தங்கியிருந்த போது ஒரு தெலுங்குப் படத்தில் வரும் நடனக் காட்சியில் கலந்து கொண்டு நடனம் ஆடினார். விஜயலட்சுமி நடனம் ஆடிய காட்சிகள் 4நாட்களாக படமாக்கப்பட்டன. இது போலவே சென்ற ஆண்டும் சென்னை வந்திருந்த போது ஒரு தெலுங்குப் படத்துக்காக நடனம் ஆடினார்.

"அன்னை வேளாங்கண்ணி"

"அன்னை வேளாங்கண்ணி" என்ற புதிய படத்தை 'கிரி மூவிசார்' கலரில் உருவாக்குகிறார்கள்.

பிரபல நடிகைகள்

இதில் பத்மினி, கே ஆர். விஜயா, தேவிகா ஆகிய 3 பிரபல நடிகைகளும் நடிக்கிறார்கள். முத்துராமன், சுந்தரராஜன், எஸ் வி. சுப்பையா சந்திரபாபு, சிவகுமார், ஸ்ரீவித்யா ஆகியோரும் நடிக்கிறார்கள். தேவராஜ் இசை அமைக்க வின்சென்ட் ஒளிப்பதிவுடன் டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்றுள்ளார். வசனத்தை சாமிதாசன் ஏற்றுள்ளார்.



கோவை நாஸ் தியேட்டரில் நடைபெறும் "நம்ம குழந்தைகள்" படத்தில் ஜெய்சங்கர், சுந்தரராஜன், மாஸ்டர் ஸ்ரீதர், நிர்மலா ஆகியோர்நடித்துள்ளனர்.

Edited Printed and Published by Kovai Muthalvan,
at Sellam Printers, 823, Big Bazaar Street, Coimbatore-1. Phone at : 33361